வானவில்

VAANAVIL

இதழ் - 87
பங்குனி 2018

ISSUE – 87
MARCH 2018

# தேர்தல் தோல்வியின் வெளிப்பாடே முஸ்லீம் மக்களுக்கெதிரான வன்முறை!



**நா**ட்டில் சிறுபான்மை தேசிய இனங்களில் ஒன்றான முஸ்லீம் மக்களுக்கெதிரான இன வன்முறை மீண்டுமொருமுறை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ள இந்தக் கோர நடவடிக்கைகள் குறித்து விளங்கிக் கொள்வதற்கு இன்றைய அரசியல் சூழ்நிலையைப் புரிந்த கொள்வது அவசியம். அதன் அடிப்படையில் பார்த்தால் –

நாட்டில் கடந்த மூன்று வருடங்களாக 'நல்லாட்சி' என்ற பெயரில் நடந்து வந்துள்ள ஐ.தே.க. – சிறீ.ல.சு.க. கூட்டரசாங்கம் சகல வழிகளிலும் எமது நாட்டைச் சீரழித்து வந்ததால், பெப்ருவரி 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் அரசுக்கு தகுந்த பாடம் புகட்டினர்.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் ஆட்சியை நடாத்திய இரண்டு கட்சிகளும் பலத்த இழுபறிகளுடன்தான் அரசாங்கத்தை நடாத்தி வந்தனர். அதன் காரணமாக அவர்களால் நாட்டை அபிவிருத்தி செய்யவோ, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவோ, போரால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவோ, இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை எடுக்கவோ முடியவில்லை. அவர்கள் செய்த ஒரேயொரு பாரிய சாதனை இலங்கை மத்திய வங்கியில் பல்லாயிரம் கோடி ரூபாய்களைக் கொள்ளையடித்ததுதான்.

இதன் காரணமாக அரசுக்கு நாளுக்கு நாள் மக்கள் மத்தியில் எதிர்ப்பு வளர்ந்தது. எதிர்ப்பைக் கண்டு அஞ்சிய அரசு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை உரிய காலத்தில் நடாத்தாது இரண்டு வருடங்களுக்கும் மேலாக இழுத்தடித்தது. தெற்கில் நடைபெற்ற சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் அரசின் பங்காளிக் கட்சிகள் இரண்டும் கூட்டு எதிரணியிடம் மண் கவ்வியதால் அரசின் அச்சம் மேலும் வலுவடைந்தது. போதாததிற்கு மூன்று மாகாண சபைகளின் தேர்தல்களையும் உரிய காலத்தில் நடாத்தாது அரசு இழுத்தடித்து வருகின்றது.

இந்த நிலைமையில்தான் நாட்டு மக்களினதும், கூட்டு எதிரணியினதும், ஜனநாயக இயக்கங்களினதும் இடையறாத வற்புறுத்தல் காரணமாக அரசு பெப்ருவரி 10இல் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த நிர்ப்பந்திக்கப்பட்டது. அதில் எதிர்பார்த்தபடியே அரசின் பங்காளிக் கட்சிகள் இரண்டும் கூட்டு எதிரணியிடம் மோசமாகத் தோற்றுப் போயின. மிக அண்மையில் உருவான 'பொதுஜன பெரமுன' என்ற கட்சியின் தாமரை மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட கூட்டு எதிரணி உள்ளூராட்சித் தேர்தலில் அமோக வெற்றியை அறுவடை செய்தது.

இதிலிருந்து ஒரு உண்மை வெளியாகியது. அதாவது, ஐ.தே.க., சிறீ.ல.சு.க. என்பன நீண்ட வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்டிருந்தும் மக்கள் அவற்றுக்கு வாக்களிக்காமல் பதிய கட்சி ஒன்றைத் தேர்ந்தெடுத்ததின் மூலம் ஒரு செய்தியை வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது மக்களைப் பொறுத்தவரை கட்சியின் பெயரோ, சின்னமோ முக்கியமல்ல. அக்கட்சி முன்வைத்திருக்கும் கொள்கைகளின் சரி பிழையைப் பார்த்தே அவர்கள் வாக்களிக்கிறார்கள் என்ற உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்த உண்மை வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை நிராகரித்ததிலும் வெளிப்பட்டிருக்கிறது.

உள்ளூராட்சி தேர்தல் முடிவு இன்னொரு முக்கியமான விடயத்தையும் தெளிவுபடுத்தி இருக்கிறது. அதாவது இனி

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

# சமூக ஊடகங்களின் தடை ஓர் அபாய சமிக்ஞை

**க**டந்த வருடம் நவம்பர் மாதம் காலி மாவட்டத்திலும், இவ்வருடம் பெப்ரவரி மாதம் 26ந் திகதி அம்பாறையிலும், இம்மாதம் மார்ச் 4ந் திகதியிலிருந்து குறைந்தது ஒரு வாரகாலமாக கண்டி மாவட்டத்திலும் (திகன, தெல்தெனியா, கட்டுகஸ்தோட்டை, தென்னக்கும்புற, அக்குறணை போன்ற பகுதிகளில்) முஸ்லீம்களுக்கு எதிராக இனவன்செயல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வன்செயல்களின் போது குறைந்தது இரு உயிரிழப்புகளோடு, முஸ்லீம்களின் வீடுகள், பள்ளிவாசல்கள் மற்றும் வியாபாரஸ்தலங்கள் அடித்து உடைக்கப்பட்டும், கொள்ளையடிக்கப்பட்டும், எரியூட்டப்பட்டுமுள்ளன.

அம்பாறையிலும் கண்டியிலும் குறிப்பாக முஸ்லீம் சமூகத்தவர் மீது நிகழ்த்தப்பட்ட இந்தத் தாக்குதல்களுக்கு வழிகோலிய காரணங்களையும் இலங்கையின் ஊடகங்கள் வெளியிட்டுமுள்ளன. அம்பாறைச் சம்பவங்கள் சாப்பாட்டுக் கடையொன்றில் கொத்து ரொட்டியில் கருத்தடை மாத்திரைகள் கலக்கப்பட்டுள்ளதாக ஏற்படுத்தப்பட்ட வீண் புரளியினாலும், கண்டிச் சம்பவங்கள் லொறி ஒன்று பின்புறமாக நகருகையில் ஓட்டோ ஒன்றின் பக்கக் கண்ணாடியில் உரசி அது உடைந்ததினால், லொறிச்சாரதி தாக்கப்பட்டு, ஒரு வாரகாலத்தின் பின்னர் அவர் கண்டி மருத்துவமனையில் மரணமடைந்ததாலும் நிகழ்ந்துள்ளதென தெரிய வருகின்றன. எனினும் எந்தவோர் இனவன்செயல் என்றாலும் ஏற்கனவே நன்கு திட்டமிடப்பட்டால் மாத்திரமே, குறித்த ஒரு சம்பவத்தை சாட்டாக வைத்து ஏற்படுத்தப்பட முடியும் என்பதே கடந்தகாலங்களில் இலங்கையில் நிகழ்ந்த இனவன்செயல்கள் எமக்குப் பாடங்கற்பிக்கின்றன.

முஸ்லீம்கள் மீதான கண்டித் தாக்குதல்களைத் தொடர்ந்து மார்ச் 5ந் திகதியிலிருந்து 10 நாட்களுக்கு அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டும் (அவசரகாலநிலை பிரகடனம் இன்னமும் நீக்கப்படவில்லை), ஊரடங்குச்சட்டம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், குறிப்பிட்ட சில சமூக ஊடகங்களுக்குத் தடையும் விதிக்கப்பட்டன. எனினும் ஆயுதங்களோடும் பொல்லுகளோடும் பல நூற்றுக்கணக்கானோர் வீராவேசத்தோடு நடமாடியதையும், பள்ளிவாசல் மற்றும் கடைகள் தாக்கப்படுவதும் எரிக்கப்படுவதும் இலங்கையைத் தளமாகக் கொண்ட பத்திரிகைகள், இணையத்தளங்கள் வாயிலாகத் தாரராளமாகக் காணக்கூடியதாக இருந்தது.

1915 ஆம் ஆண்டு சிங்கள-முஸ்லீம் இனவன்செயலின் போதும் அவசரகாலநிலை பிரகடனத்தையொத்த இராணுவச் சட்டமொன்று பிறப்பிக்கப்பட்டது. அதற்குப்பிறகு, அதாவது 103 வருடங்களின் பின்னர் முதன்முறையாக, மீண்டுமொரு சிங்கள-முஸ்லீம் இனவன்செயலைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நிகழ்ந்த 28 வருட காலப்பகுதியில் அமுலிலிருந்த அவசரகாலநிலை பிரகடனம், 2009 ஆம் ஆண்டு, போர் முடிந்து 2 ஆண்டுகளின் பின்னர் (24.08.2011 இல்) நீக்கப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. கடந்தகாலங்களில் இனவன்செயல்களைக் கட்டுப்படுத்த ஊடகங்கள் மீது தணிக்கைகள் விதிக்கப்பட்டு சில பத்திரிகைகள் தடைசெய்யப்பட்ட போதிலும், ஒரு சில சமூக ஊடகங்கள் முற்றுமுழுதாகத் தடை விதிக்கப்பட்டது இலங்கையின் வரலாற்றில் இதுவே முதன்முறை.

முகநூல், வாட்ஸ்அப், வைபர் (Facebook, WhatsApp, Viber) போன்றவைகள் இனவாதக்கருத்துக்கள் பரவுவதைத் தடுப்பதற்காகவே தடைசெய்யப்பட்டதாக இலங்கை அரசு தெரிவிக்கின்றது. இவைகள் இலவசமான தொடர்பாடலை ஏற்படுத்தக்கூடியன. ஆனால் அரசு மற்றும் தனியார் சார்ந்த பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சி சேவைகள், இணையத்தளங்கள் என்பனவும் கட்டணங்கள் அறவிடப்படும் ஏனைய தொலைத்தொடர்புகளும் தடைசெய்யப்படவில்லை என்பது இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம். தடை விதிக்கப்படாத இவைகள் மூலம் பொதுவாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கண்டி இனவன்செயல் தொடர்பான சகல செய்திகளையும் உடனுக்குடன் அறிய முடிந்தது. எனவே இனவாதக் கருத்துக்கள் பரவுவதைத் தடுப்பதற்காகவே சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டன என்று அரசு கூறும் காரணத்தை ஒருபோதுமே ஏற்க முடியாது.

கண்டி இனவன்செயல்கள் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாத நிலையில், இந்தியாவிற்கு விஜயம் செய்த இலங்கை ஜனாதிபதி, தற்போது ஜப்பானில் உள்ளார். அங்கு, சமூக ஊடகங்களை தடை செய்ததால் ஸ்ரீலங்கா ரெலிகொம் மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு நாளொன்றிற்கு 200 மில்லியன் இலாபம் ஈட்டுகின்றன என்று இறுமாப்புடன் தெரிவித்துள்ளார். இதனால் சமூக ஊடகங்கள் இனவாதக்கருத்துக்கள் பரவுவதைத் தடுப்பதற்காகவே தடைசெய்யப்பட்டனவா அல்லது மேற்குறித்த நிறுவனங்கள் வருவாயை ஈட்டுவதற்காக தடைசெய்யப்பட்டனவா என்ற கேள்வி எழுவதும் தவிர்க்க முடியாதது.

78வது வானவில் இதழில் 'ஆட்சியாளர்களை கிலிகொள்ள வைக்கும் சமூக ஊடகங்கள்' என்று தலைப்பிடப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தில், சமூக ஊடகங்களின் பங்கு, அவற்றின் அவசியம் பற்றி ஓரளவு எழுதப்பட்டுள்ளன. சமூக ஊடகங்கள் இலங்கையில் தடைசெய்யப்படும் நிலமை உருவாகலாம் என்பதை அனுமானித்தே அத்தலையங்கம் அப்போது எழுதப்பட்டது. சமூக ஊடகங்கள் இனவாதத்தை பரப்புகின்றன, தேசிய பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கின்றன அல்லது ஏதோவிதத்தில் சமூகத்தைக் கெடுக்கின்றதென யாராவது கருதினால், அதே சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி அதற்கெதிரான கருத்துக்களை பரப்புரை செய்வதென்பதே சரியான அணுகுமுறை. அதைவிடுத்து அவற்றினை தடைசெய்வதென்பது படுமோசமான ஜனநாயக விரோதச்செயல். எந்தவொரு ஊடகத்தடையினையும் வானவில் பத்திரிகை கண்டிப்பதோடு நின்றுவிடாது, அதற்கு எதிராகவும் குரலும் கொடுக்கும். அண்மையில் இலங்கையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிங்கள-தமிழ்-முஸ்லீம் ஆளுங்கட்சிகளுக்கு படுதோல்வியை ஏற்படுத்துவதற்கு, எதிரணியினர் சமூக ஊடகங்களை சிறப்பாகப் பயன்படுத்தினார்கள் என்றே ஆளுந்தரப்பினர் கருதி வருகிறார்கள் என்பதே இதுவரை வெளியில் கசியாத செய்தி.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

**'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**


**வானவில்**

# உள்ளூராட்சித் தேர்தலில் எதிரணியினர் இனவாதம் பேசியா வெற்றி பெற்றார்கள்?

பெப்ருவரி 10 இல் உள்ளூராட்சி தேர்தல் நடைபெற்று அதில் கூட்டு எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, 'நல்லாட்சி' அரசுக்குச் சார்பானவர்களும், தமிழ் தேசியம் பேசியோரும், ஏகாதிபத்திய அடிவருடிகளும் அதிர்ச்சியில் உறைந்து போனதை அவதானிக்க முடிந்தது. இந்த அதிர்ச்சி இன்னமும் நீங்கியதாகத் தெரியவில்லை.

குறிப்பாக, தமிழ் ஊடகங்கள், முக்கியமாகப் பத்திரிகைகள், இந்த அதிர்ச்சியிலிருந்து மீள சில நாட்கள் பிடித்தன. தேர்தல் முடிவுகள் முழுவதுமாக அறிவிக்கப்பட்டு நாலைந்து நாட்களாகிவிட்ட பின்னர் கூட அவைகளால் அதைச் சீரணிக்க முடியாமல் திண்டாடின. பல பத்திரிகைகள் புதிய செய்திகளை பதிவேற்றம் செய்யாமல் ஸ்தம்பித்துப் போய் இருந்தன. உதாரணமாக, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் 'சப்றா' புகழ் ஈ.சரவணபவனுக்குச் சொந்தமான 'உதயன்' நாளிதழ் தேர்தல் முடிவுகள் முழுவதுமாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர் வெளியிட்ட "முல்லைத்தீவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னணியில்" என்ற தலைப்புச் செய்தியுடன் நீண்ட நாட்களாகத் தவம் இருந்தது.

அதற்குக் காரணம், அவர்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீதும், 'நல்லாட்சி' அரசு மீதும் இருந்த பற்றுதலும் அளவுக்கதிகமான நம்பிக்கையுமாகும். தமிழரசுக் கட்சியினர் நீண்டகாலமாகச் சொல்லி வரும் ஒரு கருத்து, "எங்கடை கட்சி ஒரு தடியை நட்டு வைத்து இதுதான் தமிழரசுக் கட்சி என்று சொன்னால் கூட தமிழ்ச் சனம் கண்ணை மூடிக்கொண்டு வோட்டுப் போடும்" என்பதாகும். எனவே இத்தேர்தலிலும் தமிழ் மக்கள் கண்ணை மூடிக்கொண்டு தமக்கு வாக்களிப்பார்கள் என கூட்டமைப்பு எண்ணியது கானல் நீராகிப் போய்விட்டது. அதேபோல,







ஆட்சியில் இருக்கும் ஒரு கட்சி(கள்) இடையில் வரும் தேர்தல்களில் எப்படியும் (சுத்துமாத்துப் பண்ணி) வென்றுவிடும் என்ற நம்பிக்கையும் பொய்த்துப் போய்விட்டது.

## புனிதன்

இந்த மாதிரியான கணிப்புகளை மீறி நாட்டு மக்கள் தெற்கில் மட்டுமின்றி வடக்கு கிழக்கிலும் அரசுக்கெதிராகவும், அரசுக்கு முண்டுக் கொடுத்து வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பிக்கு எதிராகவும் வாக்களித்து தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

மக்களின் இந்தத் தெளிவான தீர்ப்பைப் பொறுத்துக் கொள்ள முடியாத சக்திகள் எதிரணியின் அமோக வெற்றிக்கும், தமது படுதோல்விக்கும் ஏதேதோ நியாயங்கள் சொல்லித் திருப்திப்படுகின்றன. தென்னிலங்கை அரசு சார்பு பிற்போக்கு அரசியல் சக்திகள் தமது தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாமல், "மகிந்தவுக்கு எதிராக 55 வீதமான மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்" என்று சொல்லி, தமது கையாலாகாத்தனத்தை மறைக்க முயல்கின்றன.

அத்துடன் மகிந்தவின் முன்னைய ஆட்சியில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் சம்பந்தமாக அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்காததால்தான், மகிந்த தரப்பு வெற்றிபெற முடிந்தது என்றொரு வாதத்தையும் முன்வைக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. மகிந்த உட்பட அவரது குடும்பத்தின் அங்கத்தவர்கள், உறவினர்கள், அவரது ஆட்சியில் பதவி வகித்தவர்கள் என அனைவருக்கும் எதிராக இந்த அரசாங்கம் கடந்த மூன்று வருடங்களில் சுமார் 400 வரையிலான வழக்குகளைத் தொடுத்திருக்கின்றது. இவற்றில் 10 வழக்குகளில் கூட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. அப்படியிருக்க அரசு அவர்களைத் தண்டிக்காததால்தான் அரசுக்கு எதிராக மக்கள் வாக்களித்தார்கள் என்ற நியாயம் எப்படிச் சரியாகும்?

அதுவுமல்லாமல், மகிந்த அணி ஊழல் மோசடிகளில் ஈடுபட்டது என்று மக்கள் கருதி, அதற்கெதிராக அரசு நடவடிக்கை எடுக்காததால்தான் மக்கள் அரச கட்சிகளுக்கு எதிராக வாக்களித்தார்கள் என்பதை ஒரு வாதத்துக்காக ஏற்றுக் கொண்டாலும், நடவடிக்கை எடுக்காத அரச கட்சிகளை விட, ஊழல் செய்த மகிந்த அணியினருக்கு எதிராகவல்லவா மக்கள் பெருமளவில் வாக்களித்திருக்க வேண்டும். ஆனால் மக்கள் அப்படிச் செய்யாமல் மகிந்த அணியை ஆதரித்து பெருமெடுப்பில் வாக்களித்தது எதற்காக? அதற்கு உண்மையான காரணம், அரசாங்கம் எதிரணியினர் மீது அரசியல் உள் நோக்கங்களுடன் சுமத்தி வரும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை, சோடிக்கப்பட்டவை என்று அவர்கள்

கருதியதால்தான்.

அதேநேரத்தில் தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரையில், தமிழ் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் விமர்சகர்கள், பத்தி எழுத்தாளர்கள், புத்திஜீவிகள் என பல நாமங்களைச் சூட்டிக் கொண்டு பவனி வரும் அத்தனை பிற்போக்கு தமிழ் தேசியவாத சக்திகளும், மகிந்த அணி சிங்கள இனவாதம் பேசியதால்தான், அவர்களுக்கு சிங்கள மக்கள் அமோகமாக வாக்களித்துள்ளார்கள் என்று பிரச்சாரம் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். அது உண்மையானால் முதலில் அவர்களிடம் ஒரு கேள்வி.

“நீங்கள் சொல்வது உண்மையானால், 2015 ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலிலும், பின்னர் அதே ஆண்டு ஓகஸ்ட்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும், ஏன் இந்த சிங்கள மக்கள் மகிந்தவை ஆதரித்து வாக்களித்து வெற்றிபெற வைக்கவில்லை?”

உண்மை என்னவென்றால், நாய்க்கு எங்கை அடித்தாலும் அது பின்னங்காலைத்தான் தூக்கும் என்று சொல்வது போல, நமது இந்தப் பிற்போக்குத் தமிழ் தேசியவாதிகளும் தமக்கு எதிராக ஏதாவது விரோதமாக நடந்தால், அதற்கு சிங்கள இனவாதம் தான் காரணம் என நாக்கூசாமல் உடனடியாகக் கூறி விடுவர். தமக்குச் சாதகமாக ஏதாவது நடந்தால், சிங்கள மக்கள் இனவாதத்தைக் கடந்து விட்டார்கள் என்று சொல்வார்கள். அப்படியான கதைதான் அவர்களது 2015 ஜனவரி 8 நிலைப்பாடும், 2018 பெப்ருவரி 10 நிலைப்பாடும்.

எல்லோருக்கும் தெரியும் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவோ அல்லது கூட்டு எதிரணி சார்ந்த எவருமோ சிறுபான்மை தேசிய இனங்கள் சம்பந்தமாக இனவாத அடிப்படையில் எந்த ஒரு சொல்லையும் உதிர்க்கவில்லை என்று. மாறாக அவர்கள் சிறுபான்மை இனங்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கும் சென்று கூட்டங்கள் நடாத்தி மக்களின் ஆதரவைக் கேட்டனர். மக்களும் ஓரளவுக்கு அவர்களது வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து அவர்களுக்கு வாக்களித்தனர். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும், இதர தமிழ் இனவாத அரசியல் கட்சியினரும் என்ன செய்தார்கள்? மேடைக்கு மேடை இனவாதம் பேசினார்கள். அப்படியிருக்க மகிந்த தரப்பு இனவாதத்தால்தான் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றது என நாக்கூசாமல் இவர்கள் சொல்வது இந்த அரசுக்கு எதிராக வாக்களித்த நாட்டின் பெரும்பாலான மக்களை அவமதிப்பதற்காகவே.

நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்துக்கு எதிராக பெருமெடுப்பில் வாக்களித்ததிற்கு உண்மையான காரணம் என்ன என்பதை விளங்கிக் கொள்வது அப்படி ஒன்றும் கடினமான விடயமல்ல.

இந்த அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவபர்கள் 2015 தேர்தல்களில் மக்களுக்கு பொய் வாக்குறுதிகளைக் கொடுத்தே ஆட்சிபீடம் ஏறினார்கள். தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பது உட்பட அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. போதாக்குறைக்கு முன்னைய அரசால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளையும் இந்த அரசு நிறுத்தியது. விலைவாசிகளை கட்டுக்கடங்காமல் உயர்த்தியது. முன்னைய அரசின் ஊழல் பற்றிப் பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் அதை நிரூபிக்க வக்கில்லாமல் தாமே மத்திய வங்கி பிணைமுறி மூலம் பல்லாயிரம் கோடி ரூபாக்களைக் கொள்ளையிட்டார்கள். தமது நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடிய தொழிலாளர்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள் மீது அடக்குமுறையை ஏவி விட்டனர். நாட்டின் வளங்களை அந்நியருக்கு தாரைவார்த்தார்கள். இப்படியாக கட்டுக்கடங்காத மக்கள் விரோத நடவடிக்கைகளைச் செய்தார்கள்.

அதனால் இந்த அரசுக்கு எதிராக மக்களின் எதிர்ப்பு நாளுக்கு நாள் வளர்ந்தது. அதைக் கண்டு அஞ்சிய ஆட்சியாளர்கள் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்தாது இரண்டு வருடங்களுக்கும் மேலாக இழுத்தடித்தார்கள். தொடர்ந்தும் இழுத்தடித்தால் மக்கள் வீதியில் இறங்கிக் கிளர்ச்சி செய்வார்கள் என்ற நிலை தோன்றிய போதுதான் தேர்தலை நடாத்தினார்கள். தேர்தலில் மக்கள் அரசுக்கும் அதன் எடுபிடிகளாகச் செயற்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. என்பனவற்கும் நல்ல பாடம் புகட்டினார்கள். இதுதான் நடந்தது.

இதனால் திகைத்துப் போன அரசும் அதன் எடுபிடிகளும் வெற்றி பெற்ற எதிரணி மீது சேறு பூச முயல்கின்றனர். அந்தச் சேறு பூசல் மக்களிடம் கிஞ்சித்தும் எடுபடாது என்பதே நிலைமை. அவர்கள் என்னதான் தலைகீழாக நின்றாலும் அடுத்து நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் அவற்றிலும் கூட்டு எதிரணி அமோக வெற்றி பெறுவதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது.

அரசாங்கமும் அதன் அடிவருடிகளும் எதிரணியினருக்கு எதிராகச் சதி சூழ்ச்சிகளில் ஈடுபடலாம். ஆனால் அவர்களால் மக்களின் மனங்களை வெல்லவோ, அவர்களது தீர்ப்பை மாற்றவோ ஒருபோதும் முடியாது.

“மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தியாவர்.” - மாஓ

# 2 மணி நேரத்தில் சீனாவிலிருந்து அமெரிக்காவுக்கு விமானப் பயணம்!

**சீனத்** தலைநகர் பீஜிங்கிலிருந்து இரண்டு மணி நேரத்தில் அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு செல்லக்கூடிய அதிவேகமான விமானம் ஒன்றை சீனா உருவாக்கியுள்ளது. தற்பொழுது சீனாவிலிருந்து அமெரிக்காவுக்கு விமானத்தில் செல்வதற்கு 13 மணித்தியாலம் 30 நிமிடங்கள் பிடிக்கின்றது.

புதிதாக சீனா தயாரித்துள்ள விமானம் மணிக்கு 6 ஆயிரம் கிலோமீட்டர் வேகத்தில் பறக்கக் கூடியது. அண்மையில் இந்த விமானம் மணிக்கு 8 ஆயிரத்து 600 கிலோமீட்டர் வேகத்தில் வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

இந்த விமானம் பாவனைக்கு வந்தால் பயண நேரம் பெருமளவு மீதமாவதுடன், சீன — அமெரிக்க மக்களுக்கிடையிலான உறவுகளும் மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சிரியா – இழந்துவரும் இளம் விழுதுகள்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

“ஒவ்வொருநாளும் 8 மணிக்கு துயில் எழுந்து கடைக்கு வந்து விடுவேன்... வெற்றுப் பெட்டிகளை துடைத்துச் சுத்தம் செய்து பொருட்களை அடுக்கி இறாக்கையில் வைத்து விடுவேன்... இரவு எட்டு மணி வரை இதுதான்....” வாரத்திற்கு அச்சிறுவன் பெறும் ஊதியம் 43 டொலர்கள். வீட்டு வாடகையை செலுத்தவும் போதுமானதாக இல்லை.

சதாமின் சுகவீனமுற்ற தந்தையால் தொடர்ச்சியாக தொழிலை செய்து விட இயலவில்லை. எப்போதாவது அருகிலுள்ள பள்ளிவாயலை சுத்தம் செய்து சிறுதொகை அன்பளிப்பு பணத்துடன் வீடு வருவார். தாயார் இதய நோயினாலும் நீரிழிவு நோயினாலும் பாதிக்கப்பட்டவர். ஒன்பது பிள்ளைகளின் தாய்.

ஐ.நா. உணவுக்காக வழங்கும் 189 டொலர்கள் உதவிப்பணம் குடும்பத்தின் கால்வயிற்றையேனும் நிறைத்துவிட போதுமானதாக இல்லை. “சதாம் கல்வி கற்க வேண்டிய வயதில் வேலைக்கு செல்வதில் எனக்கு வருத்தமும் ஏமாற்றமும் இல்லாமல் இல்லைதான்.... இருப்பினும் குடும்பச் செலவுகளை சிறுவர்களின் தலையில் சுமத்துவதில் சிறிதும் உடன்பாடு இல்லைதான். .... வேறு தீர்வே இல்லாதபோது என்னதான் செய்வது?”

போரினால் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்ட, சிறுபிராயத்தின் சிற்சிறு இன்பங்களையும் தொலைத்த சிறுவன் சதாம் அமைதியாகவே பேசுகின்றான். “எனக்கும் மற்ற சிறுவர்களைப்போல பாடசாலை செல்ல ஆசைதான்.... சூழ்நிலை அதற்குத் தயாராக இல்லை.... நான் சம்பாதித்தே ஆக வேண்டும் எனும் கட்டாய நிலை.... எனது கடை சொந்தக்காரர் மிகவும் நல்லவர்... கடின வேலை எதுவும் எனக்குத் தர மாட்டார்.... அதனால் எனது வேலை இலகுவாகவே உள்ளது.” உதட்டோரம் ஏந்திய புன்னகை அவனது தாழ்வு மனப்பான்மையை முற்றிலும் மறைக்கப் போதுமானதாக இல்லை.

“லெபனானை விட சிரியாதான் எனக்கு மிகவும் பிடித்துள்ளது... அங்கே எனக்கு நிறைய நண்பர்கள் இருக்கின்றனர்... திரும்பிச் செல்ல ஆசையாக இருக்கின்றது.... போர்ச் சூழல் விடுவதாயில்லை...”

சிரியாவில் போர் ஆரம்பித்ததும்




ஆயிரக்கணக்கான மக்கள் ஏலவே பலஸ்தீனிய அகதிகளால் நிரம்பி வழியும் லெபனானை நோக்கி அகதிகளாக படையெடுத்தனர். பெய்ரூட் முகாம்கள் மலிவு வாடகைக்கு வீடுகளை வழங்கிய போதும் போதுமானதாக இல்லை. சிலவற்றில் யன்னல்களே இல்லாத சுகாதாரமற்ற இருப்பிடங்கள்..... கழிவுகளை முறையாக அகற்ற வழியற்ற நிலை..... எங்கு பார்த்தாலும் நாசியை அடைக்கும் துர்நாற்றம் என இவர்களது வாழ்க்கையே போராட்டம்தான்.

சிறுவன் சதாம் மற்றும் அவனது குடும்ப உறுப்பினர்கள் என மொத்தம் 11 பேர் தங்கியிருப்பதென்னவோ ஒரு சில சதுர அடிகளினுள்ளேதான்.

குண்டுகள் பொழிந்து உயிரைப் போக்கிய யுத்த களத்தை வெற்றுக் கண்களால் பார்த்த அனுபவம் இச்சிறுவனின் இதயக் கூட்டுக்குள்ளே செல்லரித்த நூல்களாய் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கின்றது.

“இங்கும் அமைதியில்லை.... அகதி முகாம்களினுள்ளும் மக்கள் சண்டையிட்டு இரத்தம் சிந்திக் கொண்டுதான் இருக்கின்றனர்....” சிறுவனின் ஆதங்கம் தொடர்கிறது......

முஹம்மத் (சிரியா அகதி சிறுவன்) ஷட்டிலா அகதி முகாம் வளாகத்தில் குட்டைகளை தாண்டி, மின்சாரக் கம்பிகளில் உரசாதவாறு வெகு லாவகமாக துள்ளிக் குதித்தோடிக் கொண்டிருக்கும் குறும்பு நிறைந்த சிறுவன் 12 வயது நிரம்பிய சிறுவன் முஹம்மத்.“நான் இன்னும் “புக்ரா அஹ்லா” (நாளை இன்னும் அழகானது) பாடசாலையில் படித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.... வேலைக்கு செல்லாத நேரங்களில் பாடசாலை செல்வேன்......”

குறுகிய படிகளில் ஏறி சிறிது தூரம் தாண்டியதும் அவனது குடும்பத்தினர் வசிக்கும் அடுக்கு வீட்டுத் தொகுதி வந்தது. குடும்ப உறுப்பினர் அறுவர் இரு அறைகளில் வசிக்கின்றனர். படுக்கையறையே வரவேற்பு அறையாகவும் சமையலறையே படுக்கையறையாகவும் அவ்வப்போது இங்கு மாறிக் கொண்டிருப்பதில் ஆச்சரியமில்லை தான். இரு அறைகள் மாத்திரமே கொண்ட வீட்டில் நிர்ப்பந்தம் அதுவே.

“எனக்கு சிரியா இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது.... இயல்பு நிலை திரும்பி உடைந்து சிதைந்து போன பாடசாலை மீள்நிர்மாணம் செய்யப்பட்டால் நான் திரும்பவும் செல்வேன்.... போர் நிகழ்வுகளை நேரில் கண்டேன்.... இப்போது நினைத்தாலும் மேனி நடுங்குகிறது... சரேலென செல்லும் யுத்த விமானங்களில் சத்தம் இன்னும் செவிப்பறைகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றது... இங்கே முகாமில் நான் பாதுகாப்பாக உணர்கிறேன்....” எதையும் வாயிலே உதிர்த்துவிட முன் தாயின் அனுமதிக்காய் அவரது முகம் நோக்கும் இயல்பான சிறுவன் முஹம்மத்.

“இவன் இங்கே மிகவும் பாதுகாப்பாக இருக்கின்றான்.... சிரியாவில் இருக்கும்போது சிறு சத்தத்திற்கே அச்சத்தால் நடுங்குவான்... மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தான்.... இங்கே மிகவும் சந்தோஷமாக இருக்கின்றான.... வேலைக்குச் செல்வதுதான் அவனைக் களைப்பூட்டும் விடயமாக உள்ளது...வீட்டு உபகரணப் பொருட்கள் விற்கும் நிறுவனமொன்றில் வேலை செய்கிறான். வாரத்திற்கு 23 டொலர்கள் சம்பாதிக்கின்றான்......” தாயின்

**தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...**

# இலங்கைக்கு பூரண சுதந்திரம் வேண்டும் என குரல் கொடுத்தவர்களில் முதன்மையானவர் அதிபர் ஹண்டி

ஹண்டி மாஸ்ரர் அவர்கள் 1899ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ந் தேதி பிறந்தார். தந்தையார் மானிப்பாயைச் சேர்ந்த ஆசிரியர் சரவணமுத்து அவர்கள். பிறப்பாலே கிறிஸ்த்தவராகிய ஹண்டி அவர்கள் தனது உயர்கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றார். அங்கே அப்போது பட்டதாரி வகுப்புகள் நடைபெறவில்லை என்பதால் கொழும்பு சென்று அங்குள்ள பல்கலைக்கழக கல்லூரியில் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொண்டார். லண்டன் சர்வகலாசாலையில் ஹண்டி 1929ஆம்ஆண்டில் பட்டதாரியாகத் தேறினார். ஆசிரியத் தொழிலிலேயே நாட்டமுடையவரான ஹண்டி அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியிலேயே தனது ஆசிரியப் பணியினை ஆரம்பித்தார். ஹண்டி அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவராக இருந்த சமயம் அங்கே அதிபராக விளங்கியவர் சங்கைக்குரிய பிக்னெல் பாதிரியார். அவர் ஒரு பெரும் கனவான். கருத்துச் சுதந்திரம் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதில் தீவிரம் காட்டியவர். ஹண்டி அவர்கள் ஆசிரியப் பணியில் அமர்ந்ததும் மாணவர்களுக்குக் கல்வி போதித்ததுடன் சிறந்த உதாரணபுருடராயும் மிளிர்ந்தார். அவருக்கென ஒரு மாணவர் வட்டம் உருவானது. அதன் விளைவாகத் தோன்றியதுதான் மாணவர் காங்கிரஸ் (Student Congress) என்ற அமைப்பு.

### இளைஞர் காங்கிரசும் அரசியல் செயற்பாடுகளும்

ஒறேற்றர் சுப்பிரமணியம், A.E.தம்பர், P.நாகலிங்கம் போன்றோர் யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவர்களாகச் சேர்ந்து கல்வி கற்றவர்கள். ஹண்டியின் 'மாணவர் காங்கிரஸ்'அவர்கள் யாபேரையும் கவர்ந்தது. இவர்கள் அதில் சங்கமமாகினர். விரைவில் மாணவர் காங்கிரஸ் பாடசாலை மட்டத்துடன் நின்றுவிடாமல் பாரிய இளம் சமூகத்தினரையும் அரவணைத்தமையால் இளைஞர் காங்கிரசாகப் (Youth Congress) பரிணமித்தது. இளைஞர் காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சியாகத் தன்னைப் பிரகடனப்படுத்தாமல், நான்கு



முக்கியமான குறிக்கோள்களுடன் செயற்பட்டது. அவையாவன:

1. அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டு இலங்கை பூரண சுதந்திரம் பெற்ற நாடாக விளங்க வேண்டும்.
2. தமிழ்ச் சமூகத்தின் புற்றுநோயாகப் பீடித்திருக்கும் சாதிபேதம் முற்றாகவே ஒழிக்கப்பட வேண்டும்.
3. ஏழை மக்களது வாழ்க்கைத்தரம் கௌரவ நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும்.
4. பாடசாலைகளில் மாணவர்களுக்கு அவரவர் தாய் மொழியிலேயே கற்பித்தல் நடைபெற வேண்டும். ஒவ்வொரு மாணவனும் இரண்டு தேசிய மொழிகளையும் கற்க வேண்டும்.

எனது பெருமதிப்புக்குரிய அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் மிக அழகாக "The Story of the Congress is almost the story of Handy Master life" என்கிறார். ஹண்டி பற்றி அவர் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியைத் தருகிறேன். "அந்தக் காலத்திலே நினைக்கக்கூட முடியாத, தேசிய உடையினை, அதுவும் கதரிலான உடையையே ஹண்டி அவர்கள் கொழும்பில் இருக்கும் பொழுது கூட உடுக்கத் தவறியதில்லை. ஹரிஜன சமூகத்து இளைஞன் ஒருவனையே தனது உதவியாளராக அவர் வைத்திருந்தார். சங்கைக்குரிய பிக்னெல் பாதிரியார் அவர்கள் ஹரிஜன் சமூகத்து மாணவர்களைப் பாடசாலையில் சேர்த்த பொழுது அதனை எதிர்த்து ஏனைய ஆசிரியர்கள் பகிஸ்கரித்த போது, ஹண்டி மாஸ்ரர் மாத்திரமே பிக்னல் அவர்களுடன் இருந்தார்".

இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த பிரபலர்களான கல்யாணசுந்தர முதலியார், சத்தியமூர்த்தி, P.de S.குலரத்தினா, S.W.R.D.பண்டாரநாயக்கா, Dr.N.M.பெரோரா, பிலிப் குணவர்த்தனா போன்றோர்களை அழைத்து தங்களது கொள்கைப் பிரச்சாரக் கூட்டங்களை இளைஞர் காங்கிரஸ் நடத்தியதுடன், தொடர்ந்து 15 வருடங்கள் வருடாந்தக் கூட்டங்களையும் பெரும் மகாநாடாக நடத்தியுள்ளது. ஒவ்வொரு வருடாந்தக் கூட்டத்திலும் இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வேண்டும் எனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வருடாந்தக் கூட்டங்களில் சமபந்தி போசனம் முதன்மை பெற்றது. மிகப் பிரமாண்டமாக ஓலைக் கொட்டில்கள் போடப்பட்டு அங்கே நடத்தப்பட்ட இக்கூட்டங்கள் சாதிப் பக்தர்களாலும், வேதாகம சமாஜத்தினராலும் பல வகைகளில் எதிர்க்கப்பட்டன. கொட்டில்கள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்களும், கூட்டத்துக்கு வந்தோர் குடிப்பதற்கு நீர் எடுக்கும் கிணறுகளிலே பாம்புகளைக் கொன்று போட்டதும், கல்லெறிந்து ஆட்களை விரட்டியது போன்ற மிகக் கேவலமான பல சம்பவங்கள் இளைஞர் காங்கிரசை வேரோடு அழிப்பதற்கான முயற்சிகளாகும்.

இளைஞர் காங்கிரஸ் எடுத்த முயற்சிகள் யாவற்றிலும் மிகவும் பிரதானமான ஆண்டாக 1931 நிலவுகின்றது. அவ்வாண்டிலே சட்டசபைக்கான தேர்தல் நடைபெற்றது. இங்கிலாந்து அரசினால் நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்ட டொனமூர் ஆணைக்குழு வழங்கிய சலுகைகள் பூரண சுதந்திர வேட்கையைத் தணிப்பதாய் இருக்கவில்லை. ஆகவே, சட்டசபைத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என இளைஞர் காங்கிரஸ் ஏகமனதாகத்

தீர்மானம் நிறைவேற்றியது. தேர்தலுக்கு நிற்க முற்பட்டோரை ஹண்டி அவர்கள் தலைமையிலான இளைஞர்கள் நேரடியாகவே சென்று தேர்தலுக்கு மனுச்செய்ய வேண்டாமென இறைஞ்சினர். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றரெனலாம். இது இளைஞர் காங்கிரஸ் நிகழ்த்திய சாதனை என சிங்களத் தலைவர்கள் கூட கூறிப் பெருமைப்பட்டனர். இதன் காரணமாக இளைஞர் காங்கிரசுடன் தம்மையும் இணைத்துக் கொண்டதன் விளைவாக அகில இலங்கை இளைஞர் காங்கிரஸ் என்ற அமைப்பே உருவாகுவதற்கும் வழிவகுத்தனர்.

ஹண்டி அழைப்பின் பேரில் மகாத்மா காந்தி அவர்கள் *1927*ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணம் வந்தார். நவம்பர் *26*ந் தேதி இளைஞர் காங்கிரசில் அவர் ஆற்றிய உரையின் போது, "You have taken upon yourselves and very rightly the credit of bringing me to this fair island" எனக் கூறியதிலிருந்து மகாத்மாவின் இலங்கை வருகைக்கு மூலகாரணர் ஹண்டி என்பது புலனாகிறது.

மகாத்மா காந்தியின் போதனைகளைப் பின்பற்றிய காரணத்தால் எப்பொழுதும் கைத்தறியினால் நெய்யப்பட்ட தேசிய உடையிலேயே உலவி வந்த ஹண்டி அவர்கள், இந்திய சுதந்திரத்துக்காகப் போராடிய அகில இந்திய காங்கிரசினதும் அதன் ''வெள்ளையனே வெளியேறு'' என்ற கோசத்திலும் அதீத பற்றுடையவராக விளங்கினார். யாழ்ப்பாணக் கல்லூரி அமெரிக்க மிசனரிகளால் நடாத்தப்பட்டு வந்தது. எனவே, ஹண்டி அவர்களின் பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போக்கு அவர்களால் சீரணிக்க முடியவில்லை. இதற்கு சிகரம் வைத்தது போல அமைந்தது *1927*இல் ஜவஹர்லால் நேருவின் முதன் முறையான இலங்கை வரவு. நேரு அவர்கள் கூட்டங்களில் இளைஞர்களைத் திசை திருப்பும் வண்ணம் புரட்சிகரமாகவும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் ஆவேசமிக்க உரை நிகழ்த்துவார் என்பதை அரசாங்கம் அறிந்ததே. எனவே, முனனெச்சரிக்கையாக அரசாங்க அதிபருக்கும், கல்வி அதிபதிக்கும் அத்தகைய கூட்டங்கள் நடைபெறாது தடுக்கும் முயற்சியை மேற்கொள்ளுமாறு அரச கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. ஹண்டி இந்த சுற்று நிருபங்கள் எதனையும் சட்டை செய்யவில்லை. வட்டுக்கோட்டைச் சந்தியிலேயே மேளவாத்தியம், இன்னிசை முழங்க ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு மகத்தான வரவேற்புக் கொடுத்ததுடன், நீண்டதொரு பவனியையும் ஏற்பாடு செய்தார்.

## *அரசியல்வாதியாக ஹண்டி*

இடதுசாரி இயக்கம் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டிலே மக்களின் அபரிமிதமான ஆதரவு பெற்ற இயக்கமாக என்றுமே இருந்ததில்லை. தேசத்தின் ஒருமைப்பாடு, அங்கு வாழ்கின்ற மக்களின் ஒற்றுமை மற்றும் பல்வேறு தேசிய இனங்களின் ஐக்கியம் என்பதையே போதித்து வந்த இடதுசாரி இயக்கம், அதன் மூலமேதான் தமிழ் மக்களின் அபிலாசைகளை ஈடேற்ற முடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தது. ஆனால் தமிழ் தேசியவாதம் இதற்கு நேர்மாறான போக்கைக் கடைப்பிடித்தது. மக்களின் அறிவுபூர்வமான சிந்தனையை மொழி உணர்ச்சி ஆட்கொண்டமையால், இடதுசாரிக் கொள்கைகள் மக்கள் மனதினைப் பெருமளவில் கவர முடியாமல் போயிற்று. இடதுசாரி இயக்கத்தில் கொள்கைப் பற்றாளர்களும் சிறந்த அறிவுஜீவிகளுமான தோழர்கள் எம்.கார்த்திகேசன், அ.வைத்திலிங்கம், வி.பொன்னம்பலம், பி.நாகலிங்கம், எம்.சி.சுப்பிரமணியம், பி.கந்தையா, வி.காராளசிங்கம் போன்றோர் நடத்திய அரசியல் கூட்டங்கள் மக்களைப் பெரும் தொகையில் ஈர்த்தன என்பது உண்மையே. ஆனால் பாராளுமன்றத் தேர்தல் என்று வந்தபோது அவை வாக்குகளாக மாறவில்லை. அவர்களது உரைகளில் தேங்கிய நியாயத்தினை மக்கள் உணர்ந்தார்களெனினும் தேர்தல் என வந்த போது மக்கள் கண்முன்னே நின்றது தமிழ் உணர்வு மாத்திரமே.

இலங்கையின் சரித்திரத்திலேயே அற்புதமான, ஆற்றல் மிக்க தலைவர்களாகவும், பேச்சாளர்களாகவும், ஒப்பற்ற அறிவுஜீவிகளுமாக விளங்கிய கலாநிதிகள் என்.எம்.ரேரா, கொல்வின்.ஆர். டி. சில்வா, பீற்றர் கெனமன், எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, எட்மண்ட் சமரக்கொடி, லெஸ்லி குணவர்த்தனா போன்ற இடதுசாரித் தலைவர்கள் யாழ்ப்பாணம் வந்து கொள்கைப் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்திய போது கேட்போர் கூடங்கள் நிறையும், கரகோசம் வானை எட்டும். ஆனால் கூட்டம் முடிந்ததும் அங்கே கேட்டது அனைத்துமே காற்றில் கரைந்துவிடும்.

ஹண்டி அவர்கள் இடதுசாரிக் கொள்கையில் ஊறித் திளைத்தவர். இடதுசாரித் தோழர்கள் பலரை "N.M", ''கொல்வின்'' என முதற்பெயர் சொல்லி அழைத்துப் பேசும் அளவுக்கு நெருக்கமானவர். ஹண்டி கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற ஆண்டு *1960*. ஆனால் அவருக்கு அப்பொழுது சேவைக்கால பத்து ஆண்டுகள் முடியவில்லை. எனவே அவர் அரசு ஓய்வூதிய விதிப்பிரகாரம் ஓய்வூதியம் பெறுவதற்கு அருகதை அற்றவர். ஆகவே அவருக்கு ஒரு நிதி அன்பளிப்புச் செய்வதற்காக ஆசிரியர் சங்கம் முயற்சியை மேற்கொண்டது. அப்போதைய ஸ்ரீமாவோ அரசில் நிதி அமைச்சராக இருந்தவர் கலாநிதி என்.எம்.பெரேரா அவர்கள். அவர் இதை அறிந்ததும் உடனடியாகவே பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்று விதியை மாற்றி அமைத்து ஹண்டி அவர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு வழிவகுத்தார்.

ஹண்டி அவர்களுக்கு அரசியலில் ஈடுபடும் அவா இருந்தது. ஆனால் அவர்கள் கட்சி அரசியலில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பாதவர். கடைசி வரை தனது நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை. ஹண்டி அவர்களின் அரசியல் ஆர்வம் இரண்டு முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்தது. ஆனால் இரண்டு முறைகளும் அவர் படுதோல்வி கண்டார். இடதுசாரிக் கட்சிகள் அத்தேர்தல்களில் தமது ஆதரவாளர்களையோ, அல்லது கட்சிப் பிரதிநிதிகளையோ வேட்பாளர்களாக நியமித்தமையால் இடதுசாரிக் கோட்பாடுகளில் நம்பிக்கை உள்ளோரின் வாக்குகள் கூட ஹண்டிக்குக் கிடைக்கவில்லை.

இத்தேர்தலில் எனது பெருமதிப்புக்குரிய அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் ஹண்டிக்காக தீவிரமாக உழைத்தார். அவர் அதிபராகக் கடமையாற்றிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.வி.பொன்னம்பலம் அவர்களும் உடுவில் தொகுதியில் பொதுவுடமைக் கட்சி சார்பில் போட்டியிட்டார். பாடசாலையின் முகாமையர் திரு.வி.தருமலிங்கம் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டார். ஆனால் ஒறேற்றர் அவர்கள் அவர்கள் இருவரையும் விட்டு ஹண்டி அவர்களுக்கே ஆதரவாகப் பிரச்சாரம் செய்தார்.

"ஸ்ரீ பேரின்பநாயகம் ஒரு தப்புக்

காரியம் செய்தார். அதாவது இலங்கை சட்டசபைத் தேர்தலுக்கு நின்றார். சட்டசபைத் தேர்தலுக்கு நின்றது தவறான காரியமில்லை. 'காந்தீயவாதி' என்று சொல்லிக் கொண்டு நின்றதுதான் தவறு. சிங்களவர்களின் கொடுமையிலிருந்து தமிழர்களைக் காப்பாற்றுவோம் என்றும், தமிழருக்கு 100க்கு 50 பிரதிநிதித்துவம் கேட்போம் என்றும், இல்லையேல் தனித் தமிழரசு ஸ்தாபிப்போம் என்றும் சொல்லிக் கொண்டு பிறர் நின்றார்கள். சண்டமாருதப் பிரச்சாரம் செய்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஸ்ரீ பேரின்பநாயகம் காந்தீயத்தின் பெயரால் நின்றார். நிற்கலாம், ஆனால் ஜெயிக்க முடியுமா? சூறாவளியின் முன்னால் இளந்தென்றல் நிற்குமா? எனவே தோற்றுப் போனார்கள்'' என அமரர் கல்கி அவர்கள் 'இல்ஙகைப் பயணம்' என்ற கட்டுரைத் தொடரில் எழுதியுள்ளார்கள். இத்தேர்தலின் பின்னர் ஹண்டி அவர்கள் பாராளுமன்ற அரசியல் பற்றிச் சிந்திக்கவில்லை ஆயினும் ஐக்கிய இலங்கை, சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் சம அந்தஸ்து, தாய்மொழி மூலம் கல்வி போன்றவை பற்றி தனது அபிப்பிராயங்களைக் காலத்துக்குக் காலம் தெரிவித்து வந்தார்.

திரு. S.W.R.D.பண்டாரநாயக்கா தனது ஆட்சிக்காலத்தில் ஹண்டி அவர்களை மூதவை உறுப்பினராக்குவதற்கு முயற்சி எடுத்தபோது அதனை அவர் நிராகரித்து விட்டாராம். இந்தப் பதவி தனது அறிவுக்கும் திறனுக்கும் கொடுக்கப்படும் கௌரவம் இல்லை. அரசியல் பலிக்கடா ஆக்கும் முயற்சியே எனக் கூறி நிராகரித்து விட்டாராம்.

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு ஒரு மாணவராக, ஆசிரியராக ஹண்டி அவர்களுக்கு ஏறக்குறைய 30 ஆண்டுகள் தொடர்பு இருந்தது. அவர் தனது தொடர்பை 1943இல் துண்டித்துக் கொண்டார். அதன் பின்னர் படிப்படியாக அவர் நோக்கு அவரது மூதாதையரது சமய நம்பிக்கை பக்கமாக செல்ல ஆரம்பித்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் முடிவிற்கு வந்ததெனலாம். கிறிஸ்தவ மதத்தை ஓர் அந்நிய மதமாகவே தான் கருதினார் என்பதை 'ஈழகேசரி' பத்திரிகையில் அவர் விளக்கியுள்ளார் என திரு.ச.அம்பிகைபாகன் அவர்கள் கட்டுரை ஒன்றில் எழுதியுள்ளார்கள்.

அவர் தன்னை ஒரு இந்துவாக மாற்றியமைக்கான காரணத்தை அவரே சொல்கிறார்:

"People cannot for long stand apart from their neighbours, nor can they divest themselves totally old traditional beliefs, folkways and practices and presuppositions that formed an integral element in their way of life."

"கிறிஸ்தவராக இருந்தவர் இந்துவாக மாறிய காரணத்தால் அதற்கான தண்டனையாக ஹண்டி மாஸ்ரர் நரகத்துக்குப் போவார்" என ஒரு சமயம் கிறிஸ்தவ மதபோதகர் ஒருவர் கூறினார். அதற்கு நான், "அப்படி ஹண்டி மாஸ்ரர் அங்கு போவாரானால் அங்கே உள்ள சூழல் நிலையினை மாற்றி எல்லோரும் சொர்க்கத்திலிருந்து அங்கே உல்லாசப் பயணம் செய்வதற்குகந்ததாக ஆக்கிவிடுவார் எனக் கூறினேன்" என ஒறேற்றர் அவர்கள் கட்டுரை ஒன்றில் எழுதியுள்ளார்கள்.

மொத்தத்தில், "His religion was one of love, service and forgiveness." – Orator Subramaniam

**(ஹண்டி பேரின்பநாயகம் பற்றிய இக்கட்டுரையை எழுதிய அமரர் பொ.கனகசபாபதி தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி என்பனவற்றின் முன்னாள் அதிபராவார். 'எம்மை வாழ வைத்தவர்கள்' என்ற அவரது கட்டுரைகளின் தொகுப்பில் - சேமமடு பதிப்பக வெளியீடு - இடம் பெற்ற கட்டுரையின் முக்கிய பகுதிகளே மேலே தரப்பட்டுள்ளன)**

---

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

வருத்தம் தோய்ந்த குரல்கள் இதயத்தை கனக்கச் செய்கிறது.

''வேலை இலகுவாகத்தான் இருக்கிறது…. நிறுவன உரிமையாளர் சிலவேளை கோபத்தில் சீறிப் பாய்கிறார்…. அதுதான் பயமாக உள்ளது…. நான் தவறு விடும் தருணத்தில் மாத்திரம்தான்… மற்ற நேரங்களில் மிகவும் நல்லவர்… நான் வளர்ந்ததும் எனது அக்காவின் கணவரைப்போல மருந்தக உதவியாளராக வேண்டும்…. இதுவே என் இலட்சியம்…'' முறையான கல்வி, வாழிடம் இன்றிய முஹம்மதின் எதிர்காலக் கனவு வெறும் கனவாகத்தான் இருந்து விடுமோ?

***மூலம்: அல்-ஜஸீரா***

***தமிழில்- ஹஸன் இக்பால்***

**நன்றி: போர் செய்யும் பேனாக்கள்**

# கண்டி இன வன்செயல்களின் பின்னால் அரசாங்க அமைச்சர்!

### வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்!!

அண்மையில் கண்டிப் பிரதேசத்தில் முஸ்லீம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன வன்முறைகளுக்குப் பின்னால் சூத்திரதாரியாக அரசாங்கத்தின் கொழும்புப் பிரதெசத்தைச் சேர்ந்த அமைச்சரொருவர் செயற்பட்டுள்ளார் என புலனாய்வுப் பிரிவினரிழடமிருந்த தான் அறிந்து கொண்டதாக நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருக்கிறார்.

இந்த அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரே  திகன, தெல்தெனிய பகுதிகளில் வன்முறைகளில் ஈடுபட்ட குழுவினின் தரைவரான அமித் வீரசிங்க என்பவுக்கு பணிப்புரைகளை வழங்கியுள்ளார் என வாசுதேவ மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.இந்த அமைச்சரின் செயற்பாடுகள் குறித்து விபரமான மேலதிக தகவல்கள் கிடைத்ததும் அவரது பெயரைத்தான் பகிரங்கப்படுத்தப் போவதாகவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# ∴பிடல் கஸ்ட்ரோவின் மகன் தற்கொலை செய்து கொண்டாரா?

டாக்டர் பிடல் காஸ்ட்ரோ தியாஸ் பலார்ட், (Fidel Castro Diaz-Balart) 2018 பிப்ரவரி 1 அன்று மரணததைத் தழுவினார்.

'பிடல் காஸ்ட்ரோவின் மகன் தற்கொலை' என்று உலகெங்கிலும் உள்ள ஊடகங்கள் தலைப்பிட்டு செய்தி வெளியிட்டன. கியூபப் புரட்சியின் மாபெரும் தலைவரது மகன் கடைசியில் தற்கொலை செய்து கொண்டு செத்துப் போனார் என இழிவுபடுத்துவதே இந்த தலைப்பின் நோக்கமாக இருந்தது.

உண்மையில் டாக்டர் பிடல் தற்கொலை செய்து கொண்டாரா?

கியூபக் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான 'கிராண்மா' வெளியிட்ட செய்தியில், தற்கொலை என்ற வார்த்தை இடம்பெறவில்லை.

"பிடலிட்டோ (டாக்டர் பிடல் காஸ்ட்ரோவின் செல்லப்பெயர் அவரை 'லிட்டில் பிடல்' என்றும் அழைப்பார்கள்) கடந்த சில மாதங்களாக மன அழுத்தம் சார்ந்த உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டிருந்த நிலையில் வியாழனன்று (2018,பிப்ரவரி 1) அதிகாலை மரணமடைந்தார். தோழர் பிடலிட்டோ, தனது வாழ்நாள் முழுவதையும் அறிவியலுக்காக அர்ப்பணித்தவர். தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் முக்கியத்துவம் வாய்ந்த பல அங்கீகாரங்களை பெற்றிருந்தவர்" என்று அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

இந்தச் செய்தியை உலக முதலாளித்துவ ஊடகங்கள் முற்றாகத் திரித்து, பிடல் காஸ்ட்ரோவின் மகன் அனாதையாக தற்கொலை செய்து கொண்டார் என்பது போல சித்தரித்து பரப்பியிருக்கின்றன என்பதே உண்மை. அதுமட்டுமல்ல, பிடலிட்டோவின் மரணம், பிடல் காஸ்ட்ரோவின் குடும்பத்தில் முரண்பாடு நிலவுவதை காட்டுவதாகவும் கியூபாவில் சோசலிச அரசே வீழ்ந்துவிடுவதற்கான அறிகுறி



போலவும் இல்லாத கதையெல்லாம் சேர்த்து அவரவர் விருப்பம்போல ஊடகங்கள் வெளியிட்டிருக்கின்றன.

கியூப புரட்சித் தலைவர் தோழர் பிடல் காஸ்ட்ரோ, 1948ல் மிர்தா தியாஸ் பலார்ட் என்ற பெண்ணை காதல் திருமணம் செய்து கொண்டார். அவர், ஹவானா பல்கலைக்கழகத்தில் பிடலுடன் பயின்றவர் 1949ல் இந்த தம்பதிக்கு ஆண் குழந்தை பிறந்தது. பிடல் காஸ்ட்ரோ தியாஸ் பலார்ட் என்று பெயர் வைத்தனர். இந்நிலையில், 1953ல் கியூபாவின் சாண்டியாகோவில், பாடிஸ்டா அரசாங்கத்தின்ஆயுதக் கிடங்கான மன்கடா ராணுவ முகாம் மீது பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான ஆயுதம்தாங்கிய புரட்சியாளர்களின் குழு அதிரடி யாக தாக்குதல் நடத்தியது. இந்த எழுச்சி தோற்கடிக்கப்பட்டது. பிடல் உள்ளிட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இதுதொடர்பான வழக்கில்தான், "வரலாறு என்னை விடுதலை செய்யும்" என்ற மகத்தான நீதிமன்ற உரையினை பிடல் ஆற்றினார்.

ஆனால் பிடலின் மனைவி அச்சமுற்றார். அவர் தனது குழந்தையை பாதுகாப்பது முக்கியம் என்று கருதினார். இந்தப் பின்னணியில் பிடலிடமிருந்து விவகாரத்து கோரினார். இதையடுத்து அவர்களது மண உறவு முறிந்தது. குழந்தையாக இருந்த பிடலிட்டோ, தாயோடு அழைத்துச் செல்லப்பட்டார். அவர்கள் அமெரிக்கா சென்று குடியேறினர். எனினும் 1959ல் கியூபப் புரட்சிக்குப் பிறகு மெக்சிகோ வழியாக பிடல் காஸ்ட்ரோ தனது மகன் பிடலிட்டோவை மீட்டு கியூபாவுக்கு அழைத்து வந்துவிட்டார். அப்போது முதல் பிடலிட்டோ, பிடல் காஸ்ட்ரோவின் செல்லக்குழந்தையாக வளர்ந்தார்.

பாதுகாப்பு கருதி பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அறிவியலில் தலைசிறந்த மாணவராக உருவான பிடலிட்டோ, பின்னர் சோவியத் ஒன்றியத்தில் அணு அறிவியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் பயின்றார். பின்னர் கியூபாவின் அறிவியல் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களை முன்வைத்து செயலாற்றினார். கியூபாவை முழு மின்மயமாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், சோவியத் ஒன்றியத்தின் உதவியோடு ஜுராகுவா அணுமின்சக்தி நிலைய கட்டுமானப் பணி துவங்கியது. அந்தப் பொறுப்பு பிடலிட்டோவிடம் ஒப்படைக்கப்பட்டது. பணிகள் தீவிரமாக நடந்து கொண்டிருந்த சமயத்தில், சோவியத் ஒன்றியம் வீழ்ந்தது. இதனால் அங்கிருந்து கிடைத்து வந்த நிதி உதவிகள் நின்றன. வேறு வழியில்லாமல் ஜுராகுவா அணுமின் சக்தி நிலைய பணிகள் 1992ல் நிறுத்தப்பட்டு, திட்டம் கைவிடப்பட்டது.

எனினும் அறிவியலின் இதர அனைத்து துறைகளிலும் கியூபாவை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்வதற்கான திட்டங்களுக்கு பிடலிட்டோ பொறுப்பேற்றார். கியூபாவின் அறிவியல் தந்தையாகவே அவர் அறியப்பட்டார். அணுசக்தியை ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்கான செயல்திட்டங்களை உருவாக்குவதில் வல்லமை படைத்த தலைசிறந்த அணு விஞ்ஞானிகளில் ஒருவராக உலக நாடுகளின் விஞ்ஞானிகளால் போற்றப்பட்டவர் பிடலிட்டோ.

2016 செப்டம்பரில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற விஞ்ஞானிகளின் மாநாட்டில் கியூப அரசின் அறிவியல் ஆலோசகராக பங்கேற்ற பிடலிட்டோவை அந்நாட்டின் விஞ்ஞானிகள், “இவர் ஒரு ஜப்பானியக் குழந்தை” என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டு பேசினர். இதன்பொருள் என்னவென்றால், ஜப்பானிய விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவி செய்த உலக விஞ்ஞானிகளில் ஒருவர் என்பது மட்டுமல்ல, தானே ஒரு ஜப்பானிய விஞ்ஞானி போல அவர்களோடு இரண்டறக் கலந்தவர் என்பதுதான்.

ஜப்பானில் உள்ள மிக நவீனமான அணு எரிபொருள் மறுசுழற்சி ஆலை, அதிநவீன அணுசக்தி ஆய்வகம் உள்ளிட்ட பல நிறுவனங்களில் சிறப்புப் பேராசிரியராக பங்கேற்று வழிகாட்டியவர் பிடலிட்டோ. ஆஸ்திரேலியா, சவூதி அரேபியா உள்பட உலகின் பல நாடுகளது விஞ்ஞானிகளின் உள்ளம் கவர்ந்த ஆசிரியர் பிடலிட்டோ.

கியூபாவில் பிடல் காஸ்ட்ரோ வாரிசு அரசியல் நடத்தவில்லை. இதுபற்றிக் கூட ஒருமுறை பிடல் காஸ்ட்ரோவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். கியூபாவில் மன்னராட்சி நடக்கவில்லை என்பதே அவரது பதில்.

சோசலிச கியூபாவின் மைந்தர்கள், தங்களது வாழ்வின் ஒவ்வொரு பொழுதையும் சோசலித்தைப் பாதுகாப்பதற்கே செலவிடுகிறார்கள். பிடலிட்டோவும் தமது வாழ்நாள் முழுவதும் சோசலிச கியூபாவின் அறிவியல் வளர்ச்சிக்கு அர்ப்பணித்துக் கொண்டவர்.

அவரது மறைவு கியூபாவுக்கு பேரிழப்பு.

செவ்வணக்கம் தோழர் பிடலிட்டோ.

**(‘தீக்கதிர’ நாளிதழில் எஸ்.பி.ராஜேந்திரன் எழுதிய கட்டுரையின் முக்கியமான பகுதிகள் மேலே தரப்பட்டுள்ளன. தலைப்பு எம்மால் இடப்பட்டுள்ளது – வானவில்)**

# சம்பந்தன் கேட்ட எதனையும் அரசாங்கம் செய்யவில்லை!

## மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

“அரசாங்கம் மேற்கொண்டுள்ள அமைச்சரவை மாற்றம் என்பது தலையிடியை மாற்ற தலையணையை மாற்றுவது போன்றது” எனத் தெரிவித்திருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

கொழும்பிலிருந்து வெளியாகும் ‘தினக்குரல்’ பத்திரிகை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றம் குறித்து ராஜபக்சவிடம் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

“அரசாங்கம் இன்று எல்லாவற்றையும் குழப்பி வைத்திருக்கிறது. நாட்டில் அரசாங்கம் ஒன்று உள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது. அவர்கள் இப்பொழுது அனைத்தையும் விற்கிறார்கள். பலாலி மற்றும் துறைமுகங்கள் அனைத்தும் விற்கப்படுகின்றன. கடந்த மூன்று வருடங்களில் செய்யாததை இனி வரப்போகும் இரண்டு வருடங்களிலா செய்யப் போகிறார்கள்?

சம்பந்தன் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவளித்தார். அவர்கள் என்ன பலனைப் பெற்றார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். அவர் எதிர்பார்த்த எதனையும் அரசாங்கம் கொடுக்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்தது கிடைத்திருந்தால் மக்கள் அவர்களுக்கு வாக்களித்திருப்பார்கள்.



அதனால் தேர்தலில் மக்கள் அதிருப்தியைத்தான் வெளிப்படுத்தினார்கள்.

மக்களின் தேவைகளை நிறைவேற்ற அரசு தவறிவிட்டது. அவர்கள் செய்வதாகச் சொன்ன எதனையும் செய்யவில்லை. வடக்கு கிழக்கில் மட்டுமின்றி நாடு முழுவதும் நாம் பெருமளவு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தோம். இன்று அவை அனைத்தும் நிறுத்தப்பட்டுவிட்டன. இந்த அரசாங்கம் அனைத்தையும் குழப்பி வைத்துள்ளது” எனத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டியில் உள்ள மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மகிந்த ராஜபக்ச, உள்ளூராட்சித் தேர்தலில் எமக்கு எதிராக 55 சதவீதமான மக்கள் வாக்களித்ததாக அர்த்தமற்ற முறையில் கருத்தொன்றை தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்திருக்கிறார். அப்படிப் பார்த்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக 97 சதவீதமான நாட்டு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். அதை சம்பந்தன் ஏற்றுக் கொள்கிறாரா எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்கிடையில் அஸ்கிரிய பீடம் விடுத்துள்ள ஊடகங்களுக்கான ஒரு அறிக்கையில், நாட்டில் இப்பொழுது எழுந்துள்ள நெருக்கடியான நிலைமைக்குத் தீர்வு காண்பதானால் இருக்கும் ஒரேவழி நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிதாகத் தேர்தலை நடாத்துவதுதான் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேபாளத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒன்றிணைந்தன!



**2018** பெப்ருவரி 18ஆம் திகதி நேபாள ஜனநாயகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு சிறப்புத் தினமாகும். அன்றுதான் நேபாளத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளான ஒருங்கிணைந்த மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (Unified Marxist – Leninist Communist Party) மற்றும் மாவோயிஸ்ட் மைய கம்யூனிஸ்ட் கட்சி (Communist Party – Maoist Centre) என்பன ஒன்றிணைந்து நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (Communist Party of Nepal) என ஒன்றிணைந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

நேபாளத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட மேற்படி இரு கட்சிகளும் தேர்தலின் போது மக்களுக்கு வழங்கியிருந்த வாக்குறுதிக்கு ஏற்பவே இந்த இணைப்பு நடைபெற்றுள்ளது. இந்த இணைப்பு பின்வரும் ஏழு அம்சங்களை அடிப்படையாக வைத்து நடந்தேறியுள்ளது. அவையாவன:

1. இனிவரும் காலங்களில் கட்சியின் பெயர் நோபாள கம்யூனிஸ்ட் கட்சி என அழைக்கப்படும்.
2. நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டும் தத்துவம் மார்க்சிசம் - லெனினிசம் ஆகும்.
3. கட்சியின் தத்துவார்த்த நிலைப்பாடு என்பது ஒருங்கிணைந்த மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மறைந்த தலைவர் மதன் பண்டாரி முன்மொழிந்திருந்த மக்களின் பல கட்சி ஜனநாயக அடிப்படையைக் கொண்டிருக்கும்.
4. ஒருங்கிணைந்த மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், மாவோயிஸ்ட் மைய நேபாள கம்யூனிஸ்ட் கட்சியும் உரிய பேச்சுவார்த்தைகளின் மூலமாக, மேற்படி மக்களின் பல கட்சி ஜனநாயகத்தைச் சீரமைத்திடவும் ஒரு புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
5. மேற்படி நிலைமைகளின்படி, ஒருங்கிணைந்த கட்சி தன்னுடைய இடைக்கால அறிக்கையையும், இடைக்கால அமைப்புச் சட்டத்தையும் தயாரிக்கும்.
6. அதேபோல, கட்சி, இதுவரை பெற்றிருக்கின்ற சாதனைகளைப் பாதுகாப்பதின் மூலமாக சோசலிசத்திற்கான அடித்தளத்தையும் உருவாக்கும். அதன் அடிப்படையில் நாட்டின் தேசியவாதம், ஜனநாயகம் மற்றும் சமூக நீதியை வலுப்படுத்தும் புதிய பொருளாதார மாற்றத்திற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும்.
7. கட்சி, நடைபெறவிருக்கும் பொது சிறப்பு மாநாட்டை ஒற்றுமைச் சிறப்பு மாநாக இறுதிப்படுத்தும்.

**இரண்டு குழுக்கள்**

இரு கட்சிகளுக்கும் இடையே இருந்து வரும் ஸ்தாபன மற்றும் அரசியல் தத்துவார்த்தப் பிரச்சினைகளைப் பேசிச் சரி செய்வதற்காக இரண்டு கட்சிகளினதும் சார்பாக தலா 5 உறுப்பினர்கள் கொண்ட இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் 15 நாட்களுக்குள் தமது அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இரு கட்சிகளுக்குமிடையிலான கருத்து வேறுபாடுகள் களையப்பட்ட பின்னர், மார்ச் 21ஆம் திகதி அளவில் இரு கட்சிகளினதும் இணைப்புக் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

இரு கட்சிகளுக்குமிடையிலான உடன்படிக்கை நிகழ்வு நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் நடைபெற்றது. நிகழ்வில் ஒருங்கிணைந்த மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக அதன் தலைவரும், பிரதமருமான கே.பி.சர்மா ஒலி அவர்களும், மாவோயிஸ்ட் மைய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக அதன் தலைவர்களான பிரசந்தா மற்றும் பாபுராம் பட்டாராவ் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

உலகின் ஒரேயொரு இந்து நாடு என இந்துத்துவவாதிகளால் கொண்டாடப்படும் நேபாளத்தில் ஏற்பட்டுள்ள இம்மாற்றம், அந்த நாட்டு மக்களின் சோசலிச வழியிலான அபிலாசையைப் பிரதிபலித்து நிற்கிறது.

அத்துடன், பல நாடுகளில் காலத்துக் காலம் கம்யூனிஸ்ட் கட்சிகளில் சிறு சிறு தத்துவார்த்த மற்றும் அரசியல் முரண்பாடுகள் காரணமாக கட்சிகள் தொடர்ச்சியாகப் பிளவுபட்டு வரும் சூழலில் சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஒரு முன்னுதாரணமாகவும், ஆதர்சமாகவும் அமைந்துள்ளது.

---

**"நிலைமைகள் அவ்வப்போது மாறிக் கொண்டிருக்கின்றன. நமது சிந்தனையைப் புதிய சிந்தனையைப் புதிய நிலைமைகளுக்கு இசைவாக்க வேண்டுமானால், நாம் படிக்க வேண்டும். மார்க்சியத்தை ஒப்பீட்டு வகையில் நன்கு கிரகித்து, தமது பாட்டாளி வர்க்க நிலைமைப்பாட்டில் உறுதியாய் நிற்பவர்கள் கூட படித்துக் கொண்டே இருக்க வேண்டும். புதியவற்றைக் கிரகித்துக் கொள்ள வேண்டும், புதிய பிரச்சினைகளை ஆராய வேண்டும்."**

**-மா சே துங்**

# தம்புத்தேகம மக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் மோதல்!

**பெ**ப்ருவரி 28ஆம் திகதி குருணாகல – அனுராதபுர வீதியில் அமைந்துள்ள தம்புத்தேகம பொலிஸ் நிலையச் சுற்றாடலில் அப்பகுதி பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் நடந்த மோதலில் நான்கு பொலிசார் உட்பட பல பொதுமக்களும் காயமடைந்துள்ளனர். இதன் போது பொலிஸ் நிலையம் தாக்குதலுக்கு உள்ளானதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்குப் பொலிசாரால் பயன்படுத்தப்படும் தண்ணீர் பவுசர் ஒன்றும் சேதமாக்கப்பட்டது. சம்பவங்களைத் தொடர்ந்து 5 பெண்கள் உட்பட 44 பொதுமக்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அப்பகுதிப் பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதற்கு முழுக் காரணமும் அரசாங்கமே.

ஏனெனில் அப்பகுதி மக்கள் முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள். அவர்களுக்குச் சொந்தமான சுமார் 17,000 ஏக்கர் விவசாயக் காணிகளுக்கு அருகிலுள்ள இராஜங்கனய வெவவில் (குளத்திலிருந்தே) இருந்தே நீர் பாய்ச்சப்படுகிறது. அந்தக் குளத்து நீரைப் பயன்படுத்தி போத்தல் தண்ணீர் தயாரிப்பதற்கு சீன நிறுவனம் ஒன்றுக்கு அண்மையில் தற்போதைய 'நல்லாட்சி' அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை அந்தக் குளத்து நீரையே நம்பி தமது ஜீவனோபாயத்தை நடாத்தும் அப்பகுதியின் பல்லாயிரக்கணக்கானோரின் உயிருடன் விளையாடும் விளையாட்டாகும்.

இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் சீன நிறுவனத்துக்கு வழங்கிய அனுமதியை இரத்துச் செய்யும்படி கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போதே பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த வேண்டத்தகாத சம்பவத்துக்கு முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும்.

உண்மையில் ரணில் – மைத்திரி அரசாங்கம் நாட்டில் நல்லாட்சியைத்தான் நடத்துகிறது என்றால், பொது மக்களைப் பாதிக்கும் சீன நிறுவனத்துக்கு இராஜங்கன வாவியின் நீரை வழங்கியதை இரத்துச் செய்திருக்க வேண்டும். அதன் முதல்கட்டமாக அப்பகுதிப் பொதுமக்களின் கருத்தைக் கேட்டறிந்திருக்க வேண்டும். அதை விடுத்து அரச தலைவர்கள் ஒளிந்திருந்து கொண்டு பொலிசாரை ஏவி பொதுமக்கள் மீது தாக்குதல் நடாத்துவதென்பது கோழைத்தனத்துடன் கூடிய மக்கள் விரோதச் செயற்பாடாகும். பொதுமக்களின் நலன்களுக்கு எதிராக பொலிசார் வன்முறையைக் கையில் எடுத்தால் பொதுமக்களும் தம்மைத் தற்காத்துக் கொள்ள அதே வன்மறையைக் கையில் எடுப்பார்கள் என்பது இயல்பானதே.

இதற்கெல்லாம் காரணம், 'நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன' என்பது போல, இன்றைய அரசாங்கம் தனது பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு நாட்டின வளங்கள் எல்லாவற்றையும் எதுவென்று பாராது அந்நியருக்குத் தாரைவார்த்து வருவதுதான். இப்படியே போனால் இறுதியில் நாட்டையும் அந்நியருக்கு மொத்தமாக விலைபேசி விற்பதற்கு இன்றைய அரசாங்கம் தயங்காது. இன்றைய அரசாங்கத்தின் செய்கைகள் எல்லாம் தனது வீட்டைக் கொழுத்துவதற்கு தனது சொந்த வீட்டுக் கூரையிலிருந்தே ஓலையையும் தனது அடுப்பிலிருந்தே நெருப்பையும் எடுப்பது போன்றதாக இருக்கின்றது.

அரசாங்கத்தின் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்துவதானால் தம்புத்தேகம மக்களைப் போல ஆங்காங்கே மக்கள் வீதிக்கு வந்து நியாயம் கேட்டால்தான் முடியும்.

**–சற்சொருபன்**

# அம்பாறை வன்செயலும் நவீன நீரோ மன்னர்களும்!

"ரோமாபுரி தீப்பற்றி எரிகையில் நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தானாம்" என்றொரு பழமையான சொற்றொடர் வழக்கில் உண்டு. அதுபோல் கிழக்கில் உள்ள அம்பாறை நகரில் முஸ்லீம் மக்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள், பள்ளிவாசல், வாகனங்கள் என்பன எரிக்கப்பட்டும் உடைக்கப்பட்டும் வன்செயல்கள் நிகழ்கையில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அரசும் அதன் காவல்துறையும் ஏனோதானோ என்று இருந்த நிலை நடந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், கடந்த அரசாங்க காலத்தில் அளுத்கமவில் முஸ்லீம் மக்களுக்கு எதிராக வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட போது, வானத்துக்கும் பூமிக்குமாகத் துள்ளிக் குதித்து ஆட்சி மாற்றத்துக்கு வழிகோலிய முஸ்லீம் அரசியல்வாதிகள் தமது அமைச்சுப் பதவிகளையும் சொத்துச் சுகங்களையும் பாதுகாப்பதற்காக இந்தப் பாரிய சம்பவம் சம்பந்தமாக அடக்கி வாசிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்று நாட்கள் கடந்துவிட்ட போதிலும் முஸ்லீம் மக்களுக்கெதிரான இந்தச் சம்பவம் என்ன காரணத்தால் நடைபெற்றது என இந்தப் பத்தி எழுதும் வரை அரசாங்கமோ முஸ்லீம் தலைமைகளோ எதனையும் தெரிவிக்கவில்லை.

அம்பாறையில் இத்தகைய சம்பவங்கள் நடப்பது இதுதான் முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும் பல சம்பவங்கள் நடந்துள்ளன. அதற்குக் காரணம் அம்பாறை எப்பொழுதும் சகல தரப்பு இனவாதிகளாலும் கொதி நிலையில் வைத்திருக்கப்படுவதுதான்.

வரலாற்றை எடுத்து நோக்கினால், இலங்கையின் வரை படத்தில் அம்பாறை என்பது 1948ஆம் ஆண்டுச் சுதந்திரத்துக்குப் பின்னர் உருவான மாவட்டம் என்ற உண்மை தெரிய வரும். சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைத்த டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமிழர்களும் முஸ்லீம்களும் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த வடக்கு கிழக்குப் பகுதிகளில் இனவாத நோக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கியது. அப்படி உருவாக்கிய ஒரு மாவட்டம்தான் அம்பாறை.

அதன் காரணமாகவே அம்பாறையில் காலத்துக் காலம் தமிழ் முஸ்லீம் மக்களுக்கெதிராக இன வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டு வந்துள்ளன. அரசாங்க ஆதரவு பெற்ற இனவாதிகளால் மட்டுமின்றி, புலிகளின் கட்டுப்பாடு நிலவிய காலத்தில் அவர்களாலும் இந்த மாவட்டத்தில் சிங்கள – முஸ்லீம் மக்களுக்கு எதிராக வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

எது எப்படி இருப்பினும் தற்போதைய சம்பவம் தற்செயலாக நிகழ்ந்திருக்க கூடிய ஒன்றல்ல என்பதே உண்மை. அரச ஆதரவுச் சக்திகளினதும் பாதுகாப்புச் சார்ந்தவர்களினதும் மறைமுக ஆதரவு இல்லாமல் இத்தகைய பாரிய சம்பவங்கள் நடந்திருக்க வாய்ப்பில்லை. இலங்கையின் கடந்தகால வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை தெரிய வரும்.

எனவே அரசாங்கம் உடனடியாக இந்தச் சம்பவம் பற்றி பாரபட்சமற்ற விசாரணை நடாத்தி குற்றவாளிகளைக் கைது செய்து உரிய தண்டனை வழங்குவதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய நிவாரணமும் வழங்க வேண்டும். இனிமேலும் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக வன்செயல்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கம் தட்டிக்கழிக்க முடியாத கடமையாகும்.

**–இத்ரீஸ்**

# சர்வதேச பெண்கள் தினம் – குறிப்புகள்



வருடந்தோறும் மார்ச் 08ஆம் திகதியை உலகம் முழுவதுமுள்ள பெண்களும், விடுதலை விரும்பிகளும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தினம் உருவான வரலாற்றுப் பின்னணி பற்றிய சில முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- 1908இல் அமெரிக்காவில் பெண்கள் பணி செய்த இடங்களில் நிலவிய மோசமான சூழலுக்கு எதிராக நியூயோர்க் நகரப் பெண்கள் கிளர்ந்தெழுந்து போராட்டத்தில் குதித்தனர். அந்த நாளை முன்னிறுத்தி அமெரிக்க சோசலிசக் கட்சி முதன்முதலில் பெண்கள் தினத்தைக் கொண்டாடியது. முதல் பெண்கள் தினம் அமெரிக்காவில் 1909 பெப்ருவரி 28இல் கொண்டாடப்பட்டது.
- 1910இல் பெண்களின் உரிமைகளை வலியுறுத்தியும், பெண்களுக்கும் வாக்குரிமை வேண்டும் என்பதை வலியுறுத்தியும், டென்மார்க்கின் தலைநகர் கோபன்ஹேகனில் சர்வதேச சோசலிஸ்ட் பெண்கள் மாநாடு நடைபெற்றது. இதில் 17 நாடுகளைச் சேர்ந்த சுமார் 100 பெண்கள் கலந்து கொண்டனர் பின்லாந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்த 3 பெண்களும் இவர்களில் அடங்குவர். இந்த மாநாட்டில் சர்வதேச அளவில் பெண்கள் தினம் கொண்டாடப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதற்கான தேதி நிர்ணயிக்கப்படவில்லை.
- இருப்பினும் இந்த மாநாட்டின் விளைவாக உலகப் பெண்கள் தினம் 1911 மார்ச் 19ஆம் திகதி ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் கொண்டாடப்பட்டது. இது சம்பந்தமாக நடாத்தப்பட்ட ஊர்வலங்களில் பெண்களும் ஆண்களுமாக 10 இலட்சத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். அதில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையும், வேலைகளில் பால் சமத்துவமும் வலியுறுத்தப்பட்டது. 1914இல் முதலாம் உலகப் போர் தொடங்கியது. இந்தப் போரை எதிர்த்தும், உலக அமைதியை வலியுறுத்தியும் ரஸ்யப் பெண்கள் பெப்ருவரி கடைசி ஞாயிற்றுக்கிழமை தமது பெண்கள் தினத்தைக் கொண்டாடினர். ருஸ்யப் பெண்களுக்கு ஆதரவு தெரிவித்து அதே வருடம் மார்ச் 08இல் ஐரோப்பா எங்கும் பெண்கள் பேரணிகளை நடாத்தினர்.
- உலகப் போரில் ரஸ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் நடந்த போரில் ஏராளமான ரஸ்ய வீரர்கள் மரணமடைந்தனர். இதனால் வாழவழியின்றித் தவித்த அந்த ரஸ்ய வீரர்களின் விதவை மனைவிகள் ஆயிரக்கணக்கில் கிளர்ந்தெழுந்து போராட்டத்தில் குதித்தனர். இதனால் 1917இல் ரஸ்யாவில் புரட்சி வெடித்து, மன்னராட்சி முடிவுக்கு வந்து, அந்நாட்டில் பெண்களுக்கு சகல விடயங்களிலும் சமவுரிமை வழங்கும் சோசலிச அரசு லெனின் தலைமையில் உதயமானது.
- இதன் விளைவாக உருவான மார்ச் 08 பெண்கள் தினத்தை, உலகம் முழுவதும் கொண்டாடிய போதிலும், பலத்த இழுபறிகளுக்குப் பின், 1975இல் தான் ஐ.நா.சபை அந்தத் தினத்தை சர்வதேசப் பெண்கள் தினமாகப் பிரகடனம் செய்தது.

உலகப் பெண்களின் உரிமைக்கான போராட்டப் பாதை நீண்டநெடிய வரலாற்றைக் கொண்டிருந்த போதிலும், மனித குலம் விஞ்ஞானத்தில் உச்ச சாதனைகளை ஈட்டிய போதிலும், இன்னமும் பல நாடுகளில் பெண்கள் இரண்டாந்தரப் பிரசைகளாகவே நடாத்தப்பட்டு வருகின்றனர். தொடர்ச்சியான போராட்டங்களும், உலகம் முழுவதும் வர்க்க, இன, மத, நிற, பால் வேறுபாடற்ற சோசலிச சமூகத்தின் தோற்றமுமே பெண்களின் முழுமையான விடுதலைக்கு வழிவகுக்க முடியும்.

**– ராமாயி**

**"ஒரு பின் தங்கிய விவசாய நாடாக விளங்கும் சீனாவை ஒரு முன்னேறிய தொழில்துறை நாடாக மாற்றும் போது, நாம் கடினமான கடமைகளை எதிர் நோக்குகின்றோம், நமது அனுபவம் போதுமானதல்ல, எனவே நாம் நன்றாகப் படிக்க வேண்டும்"** – மா சே துங்

# காங்கிரசை விழுங்கி திரிபுராவில் ஆட்சிக்கு வந்த பாஜக!

திரிபுராவில் தேர்தல் நடைபெற்ற 59 தொகுதிகளில், பாஜக 35 இடங்களையும், அதன் கூட்டணியில் இடம்பெற்ற பிரிவினைவாத கட்சியான ஐபிஎப்டி கட்சி 8 இடங்களையும் பிடித்துள்ளன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, 9லட்சத்து 81 ஆயிரத்து 11 வாக்குகளுடன், 42.6 சதவிகித வாக்குகளைப் பெற்றிருந்தும், எதிர்பாராத விதமாக 16 தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற்று பின்னடைவைச் சந்தித்துள்ளது. திரிபுராவில் ஆட்சியைப் பிடித்துள்ள பாஜக, 9 லட்சத்து 89 ஆயிரத்து 875 வாக்குகளுடன் மொத்தம் பதிவான வாக்குகளில் சுமார் 43 சதவிகிதத்தை கைப்பற்றியுள்ளது. காங்கிரசின் வாக்குகளை முழுமையாக தன்பக்கம் திருப்பி இந்த வெற்றியை பாஜக பெற்றுள்ளது. கடந்த 2013 சட்டப்பேரவைத் தேர்தலில் 36.5 சதவிகித வாக்குகளைப் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி, இம்முறை 1.54 சதவிகித வாக்குகளை மட்டுமே பெற்று, 35 சதவிகித வாக்குகளை இழந்துள்ளது. இந்த வாக்குகள் அப்படியே பாஜக–வுக்கு சென்றுள்ளன. பாஜக–வுக்கு கடந்த தேர்தலில் திரிபுராவில் கிடைத்த வாக்குகள் 1.54 சதவிகிதம் மட்டுமே ஆகும். அத்துடன், காங்கிரசை கரைத்து அதன் 35 சதவிகித வாக்குகளையும், இவை தவிர, வாக்காளர்களுக்கு பணம் கொடுத்தும், பல்வேறு அதிகார துஷ்பிரயோகம் மூலமும் சுமார் 5 சதவிகித வாக்குகளை தனக்குச் சாதகமாக திருப்பியுள்ளது. அதேபோல கடந்த தேர்தலில் காங்கிரசின் கூட்டணி கட்சியான ஐஎன்பிடி 7.59 சதவிகித வாக்குகளைப் பெற்றிருந்தது. இந்த வாக்குகள், தற்போது நடந்த தேர்தலில் கொஞ்சமும் சிதறாமல் பாஜக–வின் கூட்டணி கட்சியான ஐபிஎப்டி கட்சிக்கு சென்றுள்ளது. இந்த ஐபிஎப்டி கட்சியானது, கடந்த தேர்தலில் பெற்ற வாக்குகள் வெறும் 0.46 சதவிகிதம் மட்டுமே. தற்போது அந்த வாக்குகளை (0.7) ஐஎன்பிடி கட்சி பெற்றுள்ளது. திரிபுராவில் இவ்வாறு பல்வேறு சித்து வேலைகளை அரங்கேற்றியதன் மூலம் பாஜக – ஐபிஎப்டி கட்சிகள் ஆட்சிக்கு வந்துள்ளன.

பாஜக தன்னுடைய பண பலத்தையும் மற்றும் பல்வேறு வளங்களையும் பயன்படுத்தித் தேர்தலில் செல்வாக்கு செலுத்தி இருக்கிறது. மாநிலத்தில் பிரதான எதிர்க்கட்சியாக இருந்த



காங்கிரசிடமிருந்து வாக்குகள் உட்பட அனைத்து இடதுசாரி எதிர்ப்பு வாக்குகளையும் ஒருங்கிணைப்பதில் பாஜக வெற்றி பெற்றிருக்கிறது.

இந்திய ஜனநாயகத்தில் உள்ள குறைபாடு இந்தத் தேர்தலில் நன்கு வெளிப்பட்டுள்ளது. அதாவது, திரிபுரா சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 9 இலட்சத்து 81 ஆயிரத்து 11 வாக்குகள் பெற்ற போதிலும் அதற்கு 16 ஆசனங்களே கிடைத்துள்ளன. அதேநேரத்தில் அங்கு போட்டியிட்ட பாரதீய ஜனதாக் கட்சி 9 இலட்சத்து 89 ஆயிரத்து 875 வாக்குகள் பெற்றுள்ள பேதிலும் அதற்கு 35 ஆசனங்கள் கிடைத்துள்ளன. அதாவது, பா.ஜ.கவை விட மார்க்சிஸ்ட் கட்சிக்கு வெறுமனே 8 ஆயிரத்து 864 வாக்குகள்தான் குறைவு.

பா.ஜ.க. இம்முறை திரிபுராவில் ஆட்சியைக் கைப்பற்றிவிட வேண்டுமென்பதற்காக 1980களில் எப்படி அப்போதைய நிருபன் சக்கரவர்த்தி தலைமையிலான மார்க்சிஸ்ட் கட்சி அரசைக் கவிழ்ப்பதற்காக மத்தியில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசு சாம, பேத, தான, தண்டங்களைப் பயன்படுத்தியதோ, அதே வழிமுறைகளைத்தான் அப்படியே பயன்படுத்தியது. அதுமாத்திரமல்லாமல், தேச ஒற்றுமை பற்றி வாய்கிழியப் பேசிக்கொண்டு காங்கிரஸ் கட்சி திரிபுரா பிரிவினைவாதிகளுடன் கூட்டு வைத்தது போல, பா.ஜ.கவும் பிரிவினைவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்தே இத்தேர்தலில் போட்டியிட்டது.

அதுமாத்திரமின்றி, தேர்தல் முடிவுற்ற கையோடு, மேற்கு வங்கத்தில் மம்தா கட்சி வெற்றி பெற்ற பொழுது செய்தது போல, திரிபுராவில் மார்க்சிஸ்ட் கட்சி ஆதரவாளர்கள் பா.ஜ.க. குண்டர்களால் வகைதொகையின்றி அடித்து நொருக்கப்பட்டுள்ளதுடன், கட்சி காரியாலயங்களுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது. அங்கு நிறுவப்பட்டிருந்த லெனின் சிலையொன்றும் தகர்க்கப்பட்டுள்ளது.

பா.ஜ.க. சகலவிதமான மோசடிகள் மற்றும் அடாவடித்தனங்கள் மூலம் அங்கு வெற்றி பெற்றிருந்தாலும், அங்கு உள்ள மார்க்சிஸ்ட்டுகளின் சிறப்பு அம்சம் என்னவெனில், திரிபுராவில் தொடர்ந்து மக்கள் ஆதரவு பெற்ற முதலமைச்சராக 20 ஆண்டுகள் இருந்த மணிக் சர்க்கார் தமது அரசு பதவி இழந்ததைத் தொடர்ந்து, தமது மனைவியுடன் கட்சிக் காரியாலயம் சென்று தமது வாழ்க்கையை ஆரம்பித்துள்ளார். ஏனெனில், அவருக்கு சொந்த வீடோ ஒரு துண்டுக் காணியோ கிடையாது. தான் எடுத்த முதலமைச்சருக்கான சம்பளத்தையும் அப்படியே கட்சிக்குக் கொடுத்துவிட்டு, ஓய்வுபெற்ற ஆசிரியையான தமது மனைவியின் ஓய்வூதியப் பணத்திலேதான் அந்தத் தம்பதிகள் வாழ்க்கையை ஓட்டி வந்தனர்.

80களில் முதலமைச்சராக இருந்த பிரமச்சாரியான நிருபன் சக்கரவர்த்தியும் பதவி இழந்த போது கையில் ஒரு சூட்கேசுடன் கட்சிக் காரியாலயம் சென்று தன் வாழ்க்கையைத் தொடர்ந்தார் என்பது இன்னொரு முன்னுதாரணம்.

மக்கள் சேவைக்கான கம்யூனிஸ்ட்டுகளின் உதாரணத்துக்கு முன்னால் வேறெந்த முதலாளித்துவ அரசியல் தலைவர்களையும் நினைத்தும் கூடப் பார்க்க முடியாது என்பதற்கு வேறென்ன உதாரணம் வேண்டும்?

---

"படிப்பில் இரண்டு விதமான கண்ணோட்டங்கள் உண்டு. ஒன்று நமது நாட்டு நிலைமைகளுக்குப் பொருந்தினாலும் சரி, பொருந்தாவிட்டாலும் சரி, அனைத்தையும் அப்படியே எடுத்து நடும் வறட்டுக் கண்ணோட்டம். இது நல்லதல்ல. மற்றது, நமது மூளையைப் பாவித்து, நமது நாட்டு நிலைமைகளுக்குப் பொருந்தியவற்றைப் படிக்கின்ற, அதாவது நமக்கு பயனுள்ள அனுபவங்களைக் கிரகித்துக் கொள்கின்ற கண்ணோட்டம். இதுதான் நாம் கடைப்பிடிக்க வேண்டிய கண்ணோட்டம்."

–மா சே துங்

**முன்பக்கத் தொடர்ச்சி...**

நடைபெறப்போகும் மாகாண சபைத் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பனவற்றிலும் பொதுஜன பெரமுன பிரதிநிதித்துவம் செய்யும் கூட்டு எதிரணியே நிச்சயம் வெற்றி பெறும் என்ற செய்தியே அது.

இதன் காரணமாக அரசின் பங்காளிக் கட்சிகள் இரண்டும் தமது எதிர்காலம் பற்றிய அச்சத்தில் உறைந்து போயுள்ளன. அவை மட்டுமல்ல, தமது மறைமுக நடவடிக்கைகளால் இந்த மக்கள் விரோத அரசைப் பதவிக்குக் கொண்டு வந்த சர்வதேச மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளும் இந்த நிலைமையால் தடுமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்த பின்னர் அரசின் செயற்பாடுகள் முற்றுமுழுதாகச் சீர்குலைந்ததிலிருந்து இதைப் புரிந்து கொள்ளலாம். தேர்தலில் மண் கவ்விய ஆளும் கட்சிகள் இரண்டும் ஒருவர் தொண்டையை ஒருவர் பிடிப்பதிலிருந்து இதைப் புரிந்து கொள்ளலாம். இருவரும் விவாகரத்துச் செய்து கொண்டு தனிவழி போகும் முயற்சிகளிலும் இறங்கினர். ஆனால் அதற்கும் இவர்களுக்கிடையே 'திருமணம்' செய்து வைத்த சர்வதேச – பிராந்திய வல்லாதிக்க சக்திகள் விடவில்லை. இரண்டு கட்சிகளுக்கிடையிலும் மோதல் தீவிரம் அடைந்ததும் அமெரிக்க, இந்திய மற்றும் ஐரோப்பிய யூனியன் இராஜதந்திரிகள் நேரடியாகவே களத்தில் இறங்கி சமரச முயற்சிகளில் இறங்கியது இதற்குச் சான்று.

இந்தச் சூழ்நிலைகளால் நாட்டில் அரசாங்கம் ஒன்று நடைமுறையில் இருக்கின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது. அரசாங்கத்தின் எந்த நடவடிக்கைகளும் செயற்பாட்டில் இல்லாமல் அரசு இயந்திரம் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. நாட்டில் சட்டம் – ஒழுங்கு முற்றாகச் சீர்குலைந்துள்ளது. அமைச்சர்கள் நாளுக்கு நாள் வாயில் வந்ததையெல்லாம் முரண்பாடாகப் பேசி வருகின்றனர். (அமைச்சர் ராஜித சேனரத்ன இதில் அதிக புள்ளிகளுடன் முன்னணியில் இருக்கிறார்)

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் முதலில் அம்பாறையிலும் பின்னர் கண்டியிலும் முஸ்லீம் மக்களுக்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. வன்முறைகளை உரிய நேரத்திலும் முறையிலும் கட்டுப்படுத்தத் தவறிய அரசு, அதற்கான பழியை கூட்டு எதிரணி மீது போட முயல்கிறது. ஆனால் எல்லோருக்கும் தெரிந்த அப்பட்டமான உண்மை என்னவெனில், இலங்கையில் காலத்துக்குக் காலம் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அத்தனை இன வன்செயல்களும் அந்தந்த நேரத்தில் ஆட்சியில் இருந்த – பிரதானமாக ஐ.தே.க. – அரசுகளின் ஆதரவு இல்லாமல் நடைபறவில்லை என்பதே.

இதற்கு ஒரு உதாரணம், 1977இல் ஜே.ஆர். அரசு செய்த நடவடிக்கைகளாகும். அந்த ஆண்டுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. அரசு, உரிமை கோரி நின்ற தமிழ் மக்களைத் தண்டிப்பதற்காக அவர்கள் மீது பாரிய அளவில் இன வன்செயலைக் கட்டவிழ்த்துவிட்டது. அவ்வாறு செய்துவிட்டு அப்பழியை ஜே.வி.பி. மீது சுமத்தி அக்கட்சியைத் தடைசெய்தது. கம்யூனிஸ்ட் கட்சி , லங்கா சமசமாஜயக் கட்சிகளின் தினசரிப் பத்திரிகைகளைத் தடைசெய்து அக்கட்சிகள் மீதும் அடக்குமுறையை ஏவியது. அதுமாத்திரமல்லாமல் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமையைப் பறித்து சிறீ.ல.சு.கவையும் ஒடுக்கியது. அரசியல் அமைப்பில் ஆறாவது திருத்தத்தைக் கொண்டு வந்து தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவியையும், அக்கட்சியின் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் பறித்தது.

ஆனால் 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு' என்பது போல, 1977 இன வன்செயலையும், 1983 'கறுப்பு யூலை' வன்செயலையும் ஐ.தே.க. அரசுதான் பின்னணியில் இருந்து நடாத்தியது என்ற உண்மை பின்னர் அம்பலத்துக்கு வந்தது. அதுபோல தற்போது முஸ்லீம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்செயல்களின் சூத்திரதாரிகள் யார் என்பதும் விரைவில் அம்பலத்துக்கு வரும்.

ஆனால் 1977 இல் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்செயலுக்கும், தற்போது முஸ்லீம் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இன வன்செயலுக்கும் ஒரு வித்தியாசம் என்னவென்றால், அன்று தேர்தல் வெற்றியின் மமதையில் வன்செயல் தூண்டப்பட்டது, இன்று தேர்தல் தோல்வியால் வன்முறை தூண்டப்பட்டுள்ளது.

இந்த உண்மையை நாம் எமது 'வானவில்' பத்திரிகையின் கடந்த இதழ் (2018 – பெப்ருவரி) ஆசிரிய தலையங்கத்தில் சுட்டிக் காட்டியிருந்தோம். அந்தத் தலையங்கத்துக்கு "தேர்தலில் தோற்கையில் பிரிவினைவாதம் பெருக்கெடுக்கும்" எனத் தலைப்புக் கொடுத்திருந்தோம். 'பிரிவினைவாதம்' என்ற பதத்தை 'இனவாதம்' என்றும் அர்த்தப்படுத்தலாம்.

எது எப்படியிருப்பினும், நாட்டு மக்களின் முன்னால் பாரிய கடமை ஒன்று இருக்கின்றது. அது என்னவென்றால், பிற்போக்கு சக்திகள் தமக்கு அரசியல் தோல்வி ஏற்படும் நேரங்களில் அதற்குப் பதிலடியாக மக்களைப் பழிவாங்குவதே அவர்களது வழமை. அந்தப் பழிவாங்கல் இலங்கையைப் பொறுத்த வரையில் இனவாதம் என்ற பூதத்தைக் கிளப்பி விடுவதன் மூலம் அரங்கேற்றப்பட்டு வந்துள்ளது. சூழ்நிலையைப் பொறுத்து அது தமிழ் மக்களுக்கு எதிராக இருக்கும் அல்லது முஸ்லீம் மக்களுக்கு எதிராக இருக்கும்.

எனவே இத்தகைய சூழ்நிலைகளில் எமது தாய்நாட்டின் அனைத்து மக்களும் இன, மத, மொழி பேதங்களைக் கடந்து பிற்போக்கு சக்திகளுக்கும், அவர்களது ஏகாதிபத்திய எஜமானர்களுக்கும் எதிராக ஓரணியில் எழுந்து நிற்க வேண்டும். அதன் மூலம் பிற்போக்கு சக்திகளின் சதிகளையும், பிரித்தாளும் சூழ்ச்சிகளையும் தோற்கடிக்க வேண்டும்.

மக்கள் ஒரு மனிதனாக ஐக்கியப்பட்டு எழுந்து நின்றால் அவர்களை எந்தப் பிற்போக்கு சக்தியாலும் தோற்கடிக்க முடியாது. இதுவே வரலாறு கூறும் உண்மை.

---

"நூறு மலர்கள் மலரட்டும், நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும் என்பது கலை வளர்ச்சியையும் அறிவியல் முன்னேற்றத்தையும் நமது நாடடின் சோஷலிச கலாச்சாரத்தின் செழித்தோங்குவதும் மேம்படுத்துவதற்குரிய கொள்கையாகும். கலையில் பல்வேறு வடிவங்களும் பல்வேறு நடைகளும் சுதந்திரமாக வளரலாம். அறிவியலில் பல்வேறு கருத்துக்களும் சுதந்திரமாக முட்டி மோதலாம். கலையின் குறிப்பிட்ட ஒரு நடையை அல்லது ஒரு சிந்தனை முறையைத் திணித்து, இன்னொன்றைத் தடை செய்ய நிர்வாக நடவடிக்கைகள் பயன்படுத்தப்பட்டால், அது கலை, அறிவியல் வளர்ச்சிக்குத தீங்கு பயக்கும் என நாம் கருதுகின்றோம். கலைகள், அறிவியல்களில் சரியும் பிழையும் சம்பந்தமான பிரச்சினைகள், கலை அறிவியல் வட்டாரங்களில் சுதந்திரமான விவாதங்கள் மூலமும், இந்தத் துறைகளில் நடைமுறை வேலை மூலமும் தீர்க்கப்பட வேண்டும். எளியமுறையில் தீர்க்கப்படக் கூடாது."

**-மா சே துங்**

# வடக்கு கிழக்கு கல்வி நிலை குறித்து உலக வங்கியின் அதிர்ச்சி தரும் அறிக்கை!

வடக்கு கிழக்கில் பெண்களின் கல்வி அறிவு குறித்து அண்மையில் உலக வங்கி திடுக்கிடும் தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அதாவது வடக்கில் வாழ்கின்ற பெண்களில் 70 சதவீதமானோரும், கிழக்கில் வாழ்கின்ற பெண்களில் 65 சதவீதமானோரும் ஒழுங்காக எழுத முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்று அந்தத் தகவல் கூறுகிறது. அத்துடன், கடந்த 12 மாதங்களில் இந்தப் பெண்கள் ஒருபோதும் எழுதியும் இருக்கவில்லை என அந்தத் தகவல் கூறுகிறது. வடக்கு கிழக்கு பெண்கள் எனப் பொதுவாகச் சொன்னாலும் அவர்களில் 90 சதவீதத்துக்கும் அதிகமானோர் தமிழ் – முஸ்லீம் பெண்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

மேலும், இந்த சதவீதம் கிழக்கு மாகாணத்தில் ஆண்களுக்கும் பொருந்தும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

உலக வங்கியின் இந்த அறிக்கை வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு நிச்சயம் ஒரு அதிர்ச்சியான அறிக்கைதான். அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு ஒரு பேரிடி என்றே சொல்லலாம். ஏனெனில் முழு இலங்கையிலும் யாழ்ப்பாணத் தமிழர்களே கல்வியில் மிகவும் சிறந்தவர்கள் என்று அவர்கள் பெருமை பேசிய ஒரு காலமும் இருந்தது. அதில் ஓரளவு உண்மையுமிருந்தது.

அதற்குக் காரணங்கள் சில இருந்தன. ஒன்று, பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் அவர்கள் வழமையாகத் தமது காலனித்துவ நாடுகளில் செய்யும் பிரித்தாளும் வேலைக்காக சிறுபான்மை இனமான தமிழர்கள் வாழ்ந்த யாழ்ப்பாணப் பகுதியில் கிறிஸ்தவ மிசனரிகள் மூலம் அதிக பாடசாலைகளை உருவாக்கி இலங்கையின் மற்றெந்தப் பகுதியையும் விட அங்கு கூடுதலான கல்வி வாய்ப்பை வழங்கியமையாகும்.

இரண்டாவது, யாழ்ப்பாணம் நில வளமும் நீர் வளமும் குறைந்த பகுதியாக இருந்ததினால், சனத்தொகையில் ஒரு சிறு பகுதியினர் தென்னிலங்கைக்குச் சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட, மற்றைய மிகப் பெரும்பான்மையோர் உத்தியோக வாழ்ப்பைப் பெறுவதற்காக கல்வியில் அதிக நாட்டம் கொண்டனர். இந்தக் காரணங்களால் யாழ்ப்பாணப் பகுதி இலங்கையிலேயே அதிகம் படித்தவர்களைக் கொண்ட பகுதியாக மாறியது. அதனால் பிரித்தானியர் ஆட்சிக்கால இலங்கையில் மிக உயர்மட்ட அரசாங்கப் பதவிகளிலிருந்து கீழ்மட்டப் பதவிகள் வரை வடக்கு தமிழர்களே அதிகம் ஆதிக்கம் செலுத்தினர்.




ஆனால் இலங்கையில் சுயமொழிக் கல்வி நடைமுறைக்கு வந்து பெருவாரியான கிராமப்புற சிங்கள மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றதாலும், பாராளுமன்ற அரசியலுக்காக அரசியல்வாதிகள் இனவாதத்தைக் கிளப்பியதாலும், வடக்குத் தமிழர்களின் ஏகபோகம் அரசாங்க உத்தியோகத்துறையில் குறைந்தது. அதனால்தான் இந்த மத்தியதர வர்க்க தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிரதிநிதியாக தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றது எனலாம்.

இருப்பினும், சுதந்திரத்துக்குப் பின்னரும் பல வருட காலம் வடக்கு மாகாணம் கல்வியில் முன்னணியில் இருந்தே வந்துள்ளது. ஆனால் அந்த நிலைமையில் மாற்றம் வந்தது 1983இல் இனவாதப் போர் ஆரம்பமான பின்னரே.

போர் காரணமாக வடக்கு கிழக்கில் வாழ்ந்த பிள்ளைகளுக்கு இரண்டு விதமான பாதிப்புகள் உருவாகின. ஒன்று, போர் காரணமாக மக்கள் அடிக்கடி இடம் பெயர்ந்ததினால் அவர்களது பிள்ளைகள் ஒழுங்காக கல்வி கற்க முடியாத ஒரு நிலை உருவானது. மற்றது, புலிகள் தமது போர் முனைகளுக்காக பதின்ம வயதுச் சிறார்களைப் பலவந்தமாகப் பிடித்துச் சென்றதனால் அப்படியானவர்கள் கல்வியைத் தொடர முடியாமல் போய்விட்டது. சுருக்கமாகச் சொல்வதானால், வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மக்களின் கல்வி அறிவு இன்று வீழ்ச்சி அடைந்திருப்பதற்கு போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளான அரசாங்கமும் புலிகளுமே காரணம். இதை எவரும் மறுக்க முடியாது.

இந்த நிலைமை விரும்பியோ விரும்பாமலோ யதார்த்தமாகிவிட்ட நிலையில், இப்பொழுது தீர்வுகாண வேண்டிய பிரச்சினை மீண்டும் எவ்வாறு வடக்கு கிழக்கு மக்களின் கல்வி நிலையை மேம்படுத்துவது என்பதே. இதில் அரசாங்கத்துக்கு முக்கியமான பங்கு உண்டென்றாலும், பாரிய பொறுப்பு வடக்கு கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் போன்ற புத்திஜீவிகளையும், மாகாண சபை மற்றும் உள்ளூரரட்சி சபைகளுக்குத் தெரிவான உறுப்பினர்களையுமே சாரும்.

ஆனால் துரதிஸ்டவசமாக இத்தகையவர்கள் போர் முடிவுற்று சுமார் 10 வருடங்கள் ஆகியும் கூட, இந்த அதி முக்கியமான விடயத்தில் அக்கறையற்று அசமந்தமாக இருக்கிறார்கள். பெரும்பாலும் இன்றைய தமிழர் சமுதாயத்தைச் சேரந்தவர்களில் அநேகமானோர் பொதுநலன் அற்றவர்களாகவும், சுயநலனை முதன்மைப் படுத்துபவர்களாகவுமே இருக்கின்றனர்.

இந்த நிலையை மாற்றி மக்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக மீண்டும் தலைநிமிர்ந்து நிற்பதற்கு படித்தவர்கள் அனைவரும் உழைக்க வேண்டியது தலையாய கடமையாகும். ஏனெனில்,
'கல்விதான் ஒரு மனிதனை முழுமையாக்குகிறது'.

- தியாகு